விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 101 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 16 வெள்ளிக்கிழமை (29.03.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829







## நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மைத்திரிக்கு அதிரடி உத்தரவு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை எதிர்வரும் 4ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

சட்டமா அதிபரின் பணிப்புரையின் பேரில், குற்றப் புலனாய்வு திணைக்களம் நீதிமன்றத்தில் நேற்று கருத்துக்களை அறிக்கையிட்டதன் பின்னர் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

▷15

## வடக்கில் வீடற்ற மக்களுக்கு 50 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படும்

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் வீடற்ற மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் வகையில் சுமார் 50,000 வீடுகளை அமைப்பதற்கான முயற்சிகளை முன்னெடுத்து வருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

மேலும் சூரிய கலன்களின் மூலம் மின் உற்பத்தியை

▷15

# ஞானசார தேரருக்கு நான்கு வருட கடூழியச் சிறை

### முஸ்லிம் மதத்தை இழிவுபடுத்தியதற்காக கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு



*(கொழும்பு)* முஸ்லிம் மதத்தை இழிவுப்படுத்தியதற்காக பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு 4 வருட கடுழியச் சிறை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. *(07ஆம் பக்கம் பார்க்க)*

## வவுனியாவில் இளம் யுவதி சடலமாக மீட்பு



(வவுனியா)

வவுனியாவில் இளம் யுவதி ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வவுனியா ஆசிகுளம், சிதம்பரநகர் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய யுவதியே இவ்வாறு சடல

▷15

## தென்னையிலிருந்து தவறி விழுந்தவர் மரணம்

### உடையார்கட்டில் சம்பவம்

(கிளிநொச்சி)

தேங்காய் பிடுங்குவதற்காக தென்னை மரத்தில் ஏறிய குடும்பஸ்தர் ஒருவர் தவறிவிழுந்து உயிரிழந்துள்ளார்.

சுதந்திரபுரம் உடையார்கட்டைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான பிலிப்பையா ஜோய் பீரீஸ் (வயது- 61) என்பவரே உயிரிழந்துள்ளார்.

▷15

## பணவீக்கம் வீழ்ச்சி

(கொழும்பு)

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் மார்ச் மாதம் வீழ்ச்சியடைந்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

▷15

## அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் 7 ஆலயங்கள் வழிபாட்டுக்காக விடுவிப்பு

### வட மாகாண ஆளுநர் சார்ள்ஸ்



(யாழ்ப்பாணம்)

அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் காணப்படும் 7 ஆலயங்கள் வழிபாட்டுக்காக விடுவிக்கப்படும் என வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், இணைத் தலைவர்களான வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா ஆகியோரின் தலை

▷02

## மேலும் 7 இந்திய மீனவர்கள் விடுவிப்பு

(கொழும்பு)

இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த மேலும் 7 இந்திய மீனவர்கள் ஒத்தி

▷15

## அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

### எச்சரிக்கை விடுவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு அரிசியின் விலையை அதிகரிப்பதற்கு பாரிய நெல் தொழிற்சாலை உரிமையாளர்கள் முயற்சித்து வருவதாக சிறிய மற்றும் நடுத்தர அரிசி தொழிற்சாலை உரிமையாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதன் காரணமாக எதிர்காலத்தில்

▷15

## கடன் மறுசீரமைப்பு தோல்வியுற்றதால் நாட்டை நிர்வகிக்க முடியாது

### அமைச்சர் பந்துல குணவர்த்தன



(கொழும்பு)

வெளிநாட்டு அரசமுறை கடன் மறுசீரமைப்பு தோல்வியடைந்தால் எந்த அரசாங்கத்தாலும் நாட்டை நிர்வகிக்க முடியாது என்பதை நாட்டு மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

கடன் மறுசீரமைப்பு வெற்றி

▷15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழியக் கழிவு தினத்தில் ஆரோக்கிய பவனி

அனைத்துலக சூழியக் கழிவு தினமான மார்ச் 30ம் திகதி (நாளை) சிகரம் நிறுவனத்தின் படலை வடமாகாண சுற்றுலா சேவைப் பிரிவினரின் ஒழுங்குபடுத்தலில், யாழ் மாநகர பகுதியில் தூய நகரை உருவாக்குவதை இலக்காகக் கொண்ட "யாழ் ஆரோக்கிய பவனி" தூய்மையாக்கல் பணியும், விழிப்புணர்வு செயற்பாடும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தியத் துணைத் தூதரகம், யாழ் மாநகரசபை, யாழ் பிரதேச செயலகம், தொல்லியல் திணைக்களம் மற்றும் யாழ் பொலிஸாரின் நேரடிப் பங்களிப்பு மற்றும் ஆதரவுடன் மேற்கொள்ளப்படவிருக்கும் இந்தத் திட்டத்தின்கீழ், யாழ் நகரின் பிரதான வீதிகள் சிலவற்றின் ஊடாகவும், யாழ்ப்பாணத்தின் சுற்றுலா ஈர்ப்பு வலயமாக காணப்படும் மணிக்கூட்டுக் கோபுரம் முதல் பண்ணை சுற்றுவட்டம் வரையிலான பகுதியிலும் தூய்மைக்கான பணி முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ் ஆரியகுளம் சந்திப் பகுதியில் காலை 7 மணியளவில் ஆரம்பிக்கும் இந்தப் பணி, 3 வீதிகளூடாக யாழ் பண்ணைப் பகுதி வரையில் மேற்கொள்ளப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில், இந்தியத் துணைத் தூதுவர், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், யாழ் மாநகர ஆணையாளர், மாநகரசபையின் உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் மற்றும் யாழ் வணிகர் கழகப் பிரதிநிதிகள், உல்லாச விடுதிகளின் உரிமையாளர்கள் மற்றும் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-7,10)

### கோம்பயன்மணல் இந்து மயானத்தில்

## மருத்துவக் கழிவுகளை எரியூட்டுவதற்கான

# எரியூட்டி இன்று திறந்து வைப்பு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மருத்துவ கழிவுகளை எரியூட்டுவதற்காக கோம்பயன்மணல் இந்து மயானத்தில் உருவாக்கப்பட்ட எரியூட்டி இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 40 மில்லியன் ரூபாய் நிதிபங்களிப்பில் அமைக்கப்பட்ட குறித்த எரியூட்டி கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் இன்று வெள்ளிக்கிழமை(29) காலை 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

வைத்தியசாலை மருத்துவ கழிவுகளை எரியூட்டுவதில் கடந்த காலங்களில் பல்வேறு சர்ச்சைகள் எழுந்த நிலையில் எரியூட்டியை அமைப்பதற்கான இடத்தை தேர்வு செய்வதில் இழுபறி காணப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தீர்மானத்திற்கமைய யாழ் மாநகர சபை, கோம்பயன்மணல் மயான சபை என்பவற்றின் அனுமதியுடன் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் எரியூட்டி அமைக்கப்பட்டது. (ம-7,10,33)

# இணையத்தில் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டால்

## கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

சிறுவர்களின் ஆபாசமான காணொளிகள் மற்றும் நிர்வாணபுகைப்படங்களை இணையத்தில் பதிவேற்றுவது தொடர்பான முறைப்பாடுகளைப் பெறுவதற்கு புதிய முறைமையொன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் இணையத் தளத்தினூடாக நேற்று முதல் இது தொடர்பான முறைப்பாடுகளை மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படும் என அதன் தலைவர் உதய குமார அமர சிங்க தெரிவித்துள்ளார்.

இந்த அமைப்பின் மூலம் பெறப்படும் முறைப்பாடுகள் நேரடியாக இங்கிலாந்தில் உள்ள "internet watch foundation"க்கு தெரிவிக்கப்படுகின்றன. அதன் பின்னர் அந்த நிறுவனம் ஊடாக குறித்த ஆபாசமான காணொளிகள் மற்றும் நிர்வாண புகைப்படங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ம-7,10)

# டிசம்பர் மாதம் வரை முட்டையின் விலை அதிகரிக்கப்படாது

நாட்டில் மாதமொன்றுக்கு 6 இலட்சம் கோழி முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருவதாகவும் முட்டையின் விலை எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை அதிகரிக்கப்படமாட்டாது என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் செயலாளர் ரத்னஸ்ரீ அழககோன் தெரிவித்துள்ளார்.

முட்டையின் விலை 35 ரூபாவாக குறைந்தால் சிறு மற்றும் நடுத்தர முட்டை உற்பத்தியாளர்கள் கடும் சிரமங்களை எதிர் கொள்வர்.

கடந்த 2023ஆம் ஆண்டு அரசாங்கம் அதிகமான கோழிகளை இறக்குமதி செய்துள்ளது. இதன் விளைவாக, 2025ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் முட்டைகளினதும் கோழிக் குஞ்சுகளினதும் எண்ணிக்கை நாட்டில் அதிகரிக்கக்கூடும் என தெரிவித்தார். (ம-7,10)

## அதி உயர்...

மையில் நேற்று நடைபெற்றது.

இதன்போது கடந்த கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றம் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், புதிய பிரேரணைகளும் சமர்பிக்கப்பட்டன.

இதன்போது உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர், அதி உயர் பாதுகாப்பு வலயங்களில் காணப்படும் 21 வழிபாட்டுத் தலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவற்றில் 07 ஆலயங்கள் வழிபாடுகளுக்காக விடுவிக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் ஆளுநர் கூறினார். கட்டுவன், வசாவிளான் மற்றும் பலாலி ஆகிய பகுதிகளில் காணப்படும் ஆலயங்களே வழிபாட்டு நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்படவுள்ளன.

சுமார் 30 வருடங்களுக்கு மேலாக எவ்வித வழிபாடுகளையும் நிகழ்த்தாத குறித்த ஆலயங்களுக்கு முதலில் மக்கள் செல்ல வேண்டும் எனவும், இவர்களுக்கான போக்குவரத்து வசதிகளை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் இராணுவத்துடன் கலந்துரையாடவுள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார். மக்கள் அங்கு செல்லும்போது ஊடகவியலாளர்களுக்கும் அனுமதி வழங்கப்பட வேண்டும் என இதன்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர். இந்த விடயம் தொடர்பில் பாதுகாப்பு தரப்பினருடன் கலந்துரையாடி பரிசீலிக்கப்படும் என மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைத் தலைவர்கள் கூறினார்கள்.

இதேவேளை, 1985 ஆம் ஆண்டுக்கு பின்னர் வனவள மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட காணிகளை விடுவிக்குமாறு துறைசார் அமைச்சரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாகும், எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குள் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் விவசாய நவீனமயமாக்கல் செயற்பாடு தொடர்பில் மாகாண சபைக்கு அறிவிக்க வேண்டும் என குறித்த செயற்றிட்டத்தின் பிரதி பணிப்பாளருக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார். அத்துடன் விதை உருளைக் கிழங்கில் பற்றீரியா தொற்று ஏற்பட்டமை தொடர்பான முழுமையான அறிக்கையை சமர்பிக்குமாறு மாகாண விவசாய அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தினார்.

அத்துடன் யுக்திய விசேட சுற்றிவளைப்பின் ஊடாக கைது செய்யப்படும் நபர்களுக்கான புனர்வாழ்வு செயற்பாடுகளை மாத்திரம் மேற்கொள்ளாது, போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் முழு வலையமைப்பையும் கண்டுபிடிக்க வேண்டும் என பொலிஸாருக்கு ஆளுநர் கூறினார். (ம-7,10,33)

**யாழ்.கச்சேரிக்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு (விலை குறைக்கப்பட்டது)**

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3 ½ பரப்புக் காணி, இரண்டு வெட்டுக்கிணறுகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது.

மொத்தமாக 5 கோடியே 25 இலட்சம்

(கிழமை நாட்களில் பார்வையிடலாம்)

தொடர்புகளுக்கு:

+447963743585 (Whatsapp)

021 222 7141 (Sri Lanka)

Email : jamesraj_uk@yahoo.co.lk

(225)

**கண்ணீர் அஞ்சலி**



எமது கல்லூரியில் பணிபுரியும் செல்வி. கணேசராஜா பிரகாசினி அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி கணேசராஜா வசந்தா**

அவர்கள் 28.03.2024 அன்று காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு 1945.06.15

இறப்பு 2024.03.28

[illegible]

யா/கோப்பாய் [illegible] கல்லூரி

(C-0028)

**Sales Girls தேவை**

எமது பிடைவை நிறுவனத்திற்கு பிடைவை வியாபாரம் பழக ஆர்வம் உள்ள Sales Girls தேவை.

(251)

**சிவகணேசன் TEX**

இல.41, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

**J/ UNION COLLEGE**

TELLIPPALAI



Annual Inter-House Athletic Meet 2024

Date : 30th of March 2024 (Saturday)

Time : 08.30 a.m.

Venue : College Ground

President

Mr.T.Varathan

Principal

Chief Guest

Professor (Dr).Sivasubramaniyam Raguram

(Old Student)

Dean,Faculty of Arts, University of Jaffna.

Special Guest

Kalvikarunjan Mr.ESP.Nagaratnam

Proprietor, Kajamukan Hardware-Jaffna

Guests of Honour

Mr.Sivananthan Dushyanthan

Manager, (Branch Operations) Nations Trust Bank Nelliyady

Mr.K.Aathiththan

In-Service-Advisor(Maths)

Zonal Education Office, Valikamam

All are Cordially Invited

School Society

(C-0030)

**வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை**

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு:

(276)

074 17 37 684

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கொழும்புத்துறைச் சந்தி அருகில் கடற்கரை வீதி ஹெலன் தோட்டத்தில் ஒன்றேகால் (1 1/4) பரப்பு உறுதிக் காணி விற்பனைக்குண்டு. விலை 2,300,000 (இருபத்திமூன்று இலட்சம்) விலை பேசி தீர்மானிக்கப்படும்.


தொடர்புகளுக்கு உரிமையாளர் இல.

(283)

074 006 0269

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரிசி, வெங்காயத்திற்கான வரி குறைப்பு



(கொழும்பு)

ஒரு கிலோகிராம் அரிசிக்கு 65 ரூபாவாக இருந்த விசேட பண்ட வரி நேற்று முதல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி வரை ஒரு ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பெரிய வெங்காயத்தின் இறக்குமதிக்கான வரி 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரை கிலோகிராம் ஒன்றுக்கு 10 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது. (நி-5-6)

### ஏப்ரல் 2 முதல்

# மீண்டும் வேலை நிறுத்தப் போராட்டம்

## சுகாதார தொழிற்சங்கங்கள் அறிவிப்பு

(கொழும்பு)

**செவ்வாய்க்கிழமை முதல் மீண்டும் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நடைபெற்ற தொழிற்சங்க தலைமைத்துவ சபைக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணி முதல் இந்த வேலை நிறுத்தப்போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். பொருளாதார நீதியை அடைவதற்கு சுகாதார சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் நேற்றுடன் நிறைவடைந்துள்ளதுடன் மேலும் தமது கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக தொடர்ச்சியாக நாம் போராடுவோம் எனவும் அவர் குறிப்பிட்டார். (நி-5-6)



# வைரஸ் நோயால் பாதிக்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## குழந்தை நல மருத்துவர் தீபால் பெரேரா அறிவுறுத்து

(கொழும்பு)

வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக பொரளை சிறுவர் வைத்தியசாலையின் குழந்தை நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

குழந்தைகளுக்கு வாயில் சிவப்பு புள்ளிகள் அல்லது மூட்டுகளில் வெள்ளை நீர் கொப்புளங்கள், காய்ச்சல் ஏற்பட்டால் இது ஒரு வைரஸ் நோய் என்பதினை பெற்றோர்கள் அவதானிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த நோய் அறிகுறிகள் தென்படும் போது பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை பாடசாலை, முன்பள்ளி மற்றும் பகல் நேர பாமரிப்பு மையங்களுக்கு அனுப்புவதை தவிர்க்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் கை, கால் மற்றும் வாய் வைரஸ் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு நோயத் தொற்று சுமார் மூன்று நாட்களுக்கு நீடிக்கும் என்றும் இதற்கு பரசிட்டமோல் மாத்திரைகள் அல்லது பரசிட்டமோல் சிரப் என்பன பரிந்துரைக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தூசி நிறைந்த சூழல் காரணமாக ஆஸ்துமா மற்றும் இருமல் தொற்று குழந்தைகளிடையே அதிகரித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## நன்றி நவிலலும்

கடந்த மாதம் 28.02.2024 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

## அமரர். தர்மலிங்கம் தர்மஜெயசூரியர்

(Rtd customer services manager,Bank of ceylon)



அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 29.03.2024 இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்வில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**(இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்)**

எமது குடும்பத் தலைவர் சிவபதம் அடைந்த செய்திகேட்டு நேரில் வந்தும், தொலைபேசி மூலமும் சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியோருக்கும் பத்திரிகையிலும், அஞ்சலிப் பிரசுரங்கள், பதாதைகள் மூலமாகவும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட அன்பு உள்ளங்களுக்கும் இறுதிக்கிரியைகளில் அஞ்சலி உரையாற்றியவர்களுக்கும் இறுதிக் கிரியைகளிலும், இறுதி யாத்திரையில் கலந்து கொண்டோருக்கும், எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தோற்றம் 22.08.1949

மறைவு 28.02.2024

குடும்பத்தினர்

த.ரோகினிதேவி(மனைவி): 021 223 0785

த.ரோகன்ராஜ(மகன்) : 077 175 8485

(Rohan Enterprise)

த.தேனுகன்(மகன்) : 077 889 2185

அரச வீதி, உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# டில்லிக்கு 'பொல்லாதவன்' பராக்

## முதல் வெற்றியை ருசித்தது ராஜஸ்தான்



ராஜஸ்தானுக்கு எதிரான ஐ.பி.எல்., லீக் போட்டியில் ஏமாற்றிய டில்லி அணி 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. ஏற்கெனவே பஞ்சாப்பிடம் வீழ்ந்த டில்லி அணி, இப்படி ஆடினா எப்படி? கிண்ணம் வெல்ல முடியும் என ரசிகர்கள் புலம்புகின்றனர்.

இந்தியாவில் ஐ.பி.எல்., 17வது சீசன் நடக்கிறது. ஜெய்ப்பூரில் நடந்த லீக் போட்டியில் ராஜஸ்தான் - டில்லி அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற டில்லி அணி களத்தடுப்பை தேர்வு செய்தது. ராஜஸ்தான் அணிக்கு ஜெய்ஸ்வால் (5), அணித் தலைவர் சஞ்சு சாம்சன் (15), பட்லர் (11) சோபிக்கவில்லை. ராஜஸ்தான் அணி 36 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்து திணறியது.

**ரியான் விளாசல்**

பின் இணைந்த ரியான் பராக், அஷ்வின் ஜோடி விக்கெட் சரிவிலிருந்து அணியை மீட்டது. நான்காவது விக்கெட்டுக்கு 54 ஓட்டங்கள் சேர்த்தபோது அக்சர் படேல் பந்தில் அஷ்வின் (29) ஆட்டமிழந்தார். கலீல் வீசிய 15வது ஓவரில் வரிசையாக ஒரு சிக்சர், 2 பவுண்டரி அடித்த ரியான் பராக், முகேஷ் குமார் பந்தை சிக்சருக்கு அனுப்பி 34 பந்துகளில் அரைச் சதம் எட்டினார். துருவ் ஜூரெல் (20) ஓரளவு கைகொடுத்தார். தொடர்ந்து அசத்திய ரியான், நார்ட்ஜே வீசிய கடைசி ஓவரில் 2 சிக்சர், 3 பவுண்டரி அடிக்க 25 ஓட்டங்கள் கிடைத்தது.

ராஜஸ்தான் அணி 20 ஓவரில் 5 விக்கெட்டுக்களை 185 ஓட்டங்களை எடுத்தது. ரியான் பராக் (84 ரன், 6 சிக்சர், 7 பவுண்டரி), ஹெட்மயர் (14) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**வோர்னர் நம்பிக்கை**

சவாலான இலக்கை விரட்டிய டில்லி அணிக்கு டேவிட் வோர்னர், மிட்செல் மார்ஷ் ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. முதல் விக்கெட்டுக்காக 30 ஓட்டங்களைச் சேர்த்தபோது மார்ஷ் (23) ஆட்டமிழந்தார். ரிக்கி புய் (0) ஏமாற்றினார். வோர்னர் (49) நம்பிக்கை தந்தார். சகால் "சுழலில்" அணித் தலைவர் ரிஷாப் பன்ட் (28) சிக்கினார். அபிஷேக் போரெல் (9) நிலைக்கவில்லை.

அஷ்வின் வீசிய 17ஆவது ஓவரில் வரிசையாக 2 சிக்சர் பறக்கவிட்ட டிரிஸ்டன் ஸ்டப்ஸ், சந்தீப் சர்மா வீசிய 19ஆவது ஓவரில் ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடித்தார். கடைசி ஓவரில் வெற்றிக்கு 17 ஓட்டங்கள் தேவைப்பட்டன. அவேஷ் கான் பந்துவீசினார். இந்த ஓவரில் 4 ஓட்டங்கள் மட்டும் கிடைத்தது.

டில்லி அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 173 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது. ஸ்டப்ஸ் (44), அக்சர் (15) ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆட்ட நாயகன் விருதை ரியான் பராக் வென்றார்.

(ம-7,10)

**100ஆவது போட்டி**

ராஜஸ்தானுக்கு எதிராக களமிறங்கிய ரிஷாப் பன்ட், ஐ.பி.எல்., அரங்கில் டில்லி அணிக்காக 100 போட்டியில் விளையாடிய முதல் வீரரானார். இதற் காக இவருக்கு "100" என்ற எண் இடம் பெற்ற "ஸ்பெஷல் ஜெர்சி" வழங்கப் பட்டது. இவரை அடுத்து அமித் மிஸ்ரா 99 போட்டியில் பங்கேற்றுள்ளார்.

**மூன்றாவது முறை**

ராஜஸ்தானின் அஷ்வின், ஐ.பி.எல்., அரங்கில் 3வது முறையாக ஒரு இன்னிங்சில் 3 சிக்சர் அடித்தார். ஏற்கனவே கோல்கட்டா (2018), சென்னை (2022) அணிகளுக்கு எதிராக இப்படி சாதித்தார்.




# 'அன்று கண்ட அவமானம் வென்று தரும் வெகுமானம்...'

## மும்பை வீரரை ஊக்கப்படுத்திய பிராவோ

ஐபிஎல் 2024 சீசனில் நேற்று முன்தினம் ஹைதராபாத் ராஜிவ் காந்தி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் சன்ரைசர்ஸ்ஹைதராபாத் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் மும்பை அணி 31 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

அண்மையில் நடந்த 19 வயதிற்குட்பட்டோருக்கான ஐசிசி உலகக் கோப்பையில் அதிக விக்கெட் எடுத்து தொடர்நாயகன் விருது வென்று சாதனை படைத்த 17 வயதாகும் இளம் தென்னாபிரிக்க வீரர் க்வேனா மபாகா மும்பை அணிக்காக அறிமுகமானார்.

அப்போட்டியில் அவரது பந்து வீச்சை இந்தப் போட்டியில் ஹைதராபாத் துடுப்பாட்ட வீரர்கள் அடித்து விளாசினார்கள். இதனால் 4 ஓவர்களில் ஒரு விக்கெட் கூட எடுக்காமல் 66 ஓட்டங்களை வாரிக்கொடுத்து ஐபிஎல் வரலாற்றில் அறிமுகப் போட்டியிலேயே அதிக ஓட்டங்கள் கொடுத்த



வீரர் என்ற மோசமான சாதனையைப் படைத்தார்.

இந்நிலையில் இளம் வீரர் க்வேனா மபாகாவுக்கு உத்வேகம் கொடுக்கும் வகையில் ட்வயன் ப்ராவோ தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அதில், "உன்னுடைய தலையை நிமிர்ந்து வைத்துக்கொள் சம்பியன். கண்டிப்பாக நீ மீண்டெழுந்து வருவாய் என்று உறுதியாக சொல்வேன். இந்த ஒரு போட்டியை வைத்து உன் மீது சந்தேகப்பட தொடங்கி விடாதே. இது உனக்கு மிகப்பெரிய சவால். இந்தத் தொடர் செல்லும்போது தான் இன்னும் நீ முன்னேற்றமடைவாய்" என்று பதிவிட்டுள்ளார்.

(ம-7,10)

# 'தங்க மகன் இன்று சிங்க நடை போட்டு...'

## ஜொலிக்கும் கிளாசன்

ஐ.பி.எல். 2024 கிரிக்கெட் தொடரின் 8 ஆவது போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் மற்றும் மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின.


இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி 20 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 277 ஓட்டங்களை குவித்தது.

இதன் மூலம் ஐ.பி.எல். வரலாற்றில் அதிக ஓட்டங்களை குவித்த அணி என்ற பெருமையை சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி பெற்றது.

ஆர்.சி.பி. அணி குவித்த 263 ஓட்டங்களே ஐ.பி.எல். வரலாற்றில் குவிக்கப்பட்ட அதிகபட்ச ஓட்டங்களாக இருந்தது.

இப் போட்டியில் சன்ரைசர்ஸ் அணியின் டிராவிஸ் ஹெட், அபிஷேக் சர்மா மற்றும் ஹென்சிர்ச் கிளாசன் சிறப்பாக ஆடி ஓட்டக் குவிப்பில் ஈடுபட்டனர்.

டிராவில் ஹெட் 24 பந்துகளில் 62 ஓட்டங்களையும், அபிஷேக் சர்மா 23 பந்துகளில் 63 ஓட்டங்களையும், கிளாசன் 34 பந்துகளில் 80 ஓட்டங்களையும் குவித்தனர்.



ஐ.பி.எல். வரலாற்றில் அதிக ஓட்டங்களை குவித்த அணி என்ற பெருமையை பெற்றதை அடுத்து சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி நிர்வாகம், அதிரடியாக ஆடிய வீரர்களுக்கு டிரெசிங் ரூமில் சிறப்புப் பரிசுகளை வழங்கியது. அதன்படி ஹென்ரிச் கிளாசனுக்கு அதிக கனமுள்ள சங்கிலி அணிவிக்கப்பட்டது.

அளவில் பெரிதாக காட்சியளிக்கும் சங்கிலி தங்கத்தால் செய்யப்பட்டதாகவே இருக்கும் என்றும் அதன் விலை ரூ. 80 லட்சம் வரை இருக்கும் என்றும் நெட்டிசன்கள் கமென்ட் செய்து வருகின்றனர். இது தொடர்பான புகைப் படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரல் ஆகி வருகின்றன. (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு காலத்தில் அவதானத்துடன் செயற்படுங்கள்

## விபத்துகள் தொடர்பில் எச்சரிக்கை

(கொழும்பு).

புத்தாண்டு காலத்தில் வீடுகளில் ஏற்படும் விபத்துகள், வீதி விபத்துகள் தொடர்பில் அவதானமாகச் செயற்படுமாறு வைத்தியர்கள் எச்சரித்துள்ளனர்.

குறிப்பாக புத்தாண்டு தினத்திலும் அதற்கு மறுநாளிலும் விபத்துகள் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து வருவதாகவும் சிறு குழந்தைகள் மற்றும் இளைஞர்களே இந்த விபத்துகளுக்கு முகம் கொடுப்பதாகவும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

கணக்கெடுப்பு தரவுகளின்படி, பட்டாசுகளால் ஏற்படும் விபத்துகள் கை மற்றும் விரல்களில் ஏற்படுவதுடன், சுமார் 46 வீதமான, விபத்துக்கள் கண்கள் மற்றும் முகம் மற்றும் தலையில் ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டினார். (நி-5-6)

# மதுபானங்களின் விலைகள் குறைக்கப்படமாட்டாது

## மதுவரித் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டுக்கான மதுபானங்களின் விலைகள் குறைக்கப்படும் என தற்போது பரவலாகப் பரவி வரும் தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை என மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மதுபானங்கள் மீதான வரியை திருத்தியமைக்கலால் திணைக்களம் அதன் தகுதியான அதிகாரமான நிதியமைச்சகத்திடம் இருந்து எந்த உத்தரவும்அல்லது அறிவுறுத்தலும் பெறவில்லை.

எனவே மதுபானங்களின் விலை குறைக்கப்படாது என்று மதுவரித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (நி-5-6)

# யூதாஸ் முத்தமும் புனித வெள்ளியும்



ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

பைபிளின் படி. யூதசங்கத்தில்தான் கல்வாரி கரு பெற்றது என்று ஆணித்தரமாக கூறலாம். பின்னர் உருவம் பெற்று யூதாஸின் தலைமையில் கேத்சமனி தோட்டத்திற்கு வருகின்றது. யூதாஸின் முத்தத்தால் அங்கு அனைத்தும் அரங்கேறுகின்றன. இயேசு சிலுவையில் உயிர் விடுவதற்கு முன்பே யூதாஸின் முத்தம் அவரைக்கொன்று விடுகிறது. அன்பு. கருணை கொண்ட இயேசுவோடு வாழ்ந்தது உண்மை தான். ஆனால் யூதாஸ். யூத வீரர்களுடன் இயேசுவுக்கு முடிவை கட்ட வந்தபோது தன் முடிவையும் தானே எழுதிக் கொண்டான். சீடர்களிற்கு மத்தியில் உள்ள இயேசுவை. நீதான் தொட்டு அடையாளம் காட்டவேண்டும் என்று கேட்கப்பட்டான் யூதாஸ். ஆனால் அவன். தொட்டு என்ன, கட்டியணைத்து. கன்னத்தில் முத்தம் இட்டே அடையாளம் கண்பிக்கிறேன் என்றான். ஏனெனில் யூதாஸ், தான் இயேசுவால் ஏமாற்றப்பட்டதாக உணர்ந்தான். அதற்காக, அவரை மறுதலிக்கத் தீர்மானித்தான். யூதாஸ் உரோமை ஆதிக்கத்தை வெறுத்த ஒரு தீவிரவாத யூதன். உரோமையருக்கு எதிராகப் புரட்சியைத் தூண்டக் கூடிய வெற்றிகளைக் கொண்டு வரும் மெசியாவை அவன் விரும்பினான். அவ்வாறு இயேசு இல்லாதது கண்டு யூதாஸ் தனது எதிர்பார்ப்புகளால் ஏமாற்றமடைந்தான்.

மறை பொருள்கள் கொண்ட வார்த்தைகள் பண்பாகப் பிறர் மனதுக்குப் புரியும்படி எடுத்துக் கூறும் செயலே "வாயில் முத்தமிடுதல்" என்று உருவகமாக குறிப்பிடப்படுகிறது. "பலமுறை வாயில் முத்தமிட்டார்" என்பதற்குப் "பலமுறை மறை பொருள்களை கூறினார்" என்பதே பொருள்.

விசுவாசத்தின் இலட்சியம் முறிந்த இடம் இது. யூதாஸ் தந்த முத்தம்தான் இயேசுவை கொன்ற முதல் ஈட்டி. யூதாஸ் இயேசுவை காட்டிக்கொடுக்க முத்தத்தை தேர்தெடுத்தான். தந்தை மகனின் முத்தம் அன்பின் வெளிப்பாடு. ஊதாரி மகன் திரும்பி வந்தபோது ஓடிப் போய் அவனது தந்தை கட்டியணைத்து முத்தமிட்டார். அப்படி



பட்ட அன்பின் வெளிப்படான முத்தத்தை ஏன் அடையாளமாக யூதாஸ் தேர்தெடுத்தான். யாரை நான் முத்தமிடுகிறேனோ அவரைப் பிடித்துக்கொள்ளுங்கள். அவர்களுக்கு அடையாளமாக சொல்லியிருகின்றான். வேறு எந்த அடையாளத்தையும் எடுக்காமல் முத்தத்தை ஏன் தேர்தெடுத்தான்? எனவே அன்பை பரிமாறும் முத்தம் கொல்லவும் தயங்காது என்றும் சித்திரிக்கப்படுகின்றது.

யூதாஸ் இதைத்தான் செய்தான். அவனது வாய் முத்தமிட்டது. ஆனால் அது இயேசுவின் உள்ளத்தில் வாளாக ஊடுருவியது. தெளிவாகக் கூறினான் நான் முத்தமிடுபவனை பிடித்து காவலோடு கொண்டு போங்கள். இயேசுவை இங்குதான் சீடர்கள் கைவிடுகிறார்கள். யூதசங்கத்தார் இயேசுவின் முகத்தில் துப்புகிறார்கள், அடிக்கிறார்கள் - யார் அடித்தது? என்று தீர்க்க தரிசனம் கேட்கிறார்கள். மாசற்ற மனிதன் என்று தனது மனசுக்குள் தீர்ப்பு எழுதிவிட்டு. மத குருக்களின் கோரப்பிடியிலிருந்து இயேசுவை விடுவிக்க நினைத்த அரசன் பிலாத்துவும் யூதர்களின் துரோக வெறிக்கு முன்னால் தோற்றுப் போனவனாய்க் கைகழுவிவிட்டான். கொலைகாரனும் கள்வனுமான பரபாசுக்கு கருணை காட்டத் துணிந்த யூதர்கள். தங்கள் இரட்சகனுக்கு முள்முடி சூட்டி வேடிக்கை பார்த்தார்கள். பேதுரு மறுதலித்தார்.. மக்கள் சிலுவையில் அறையும் என்றனர். இருள் சூழ்ந்தது. இயேசுவும் கதறினார் - உயிரைவிட்டார். ஏற உதவிய ஏணி, ஆணிகளுக்குள் அடைபடுகிறது. முத்தம் தந்து முடிவு எழுதினான் யூதாஸ். யூதாஸ் தந்த முத்தம் இந்த சம்பவங்களுக்கு தொடக்கம். நெஞ்சை உருக்கும் இரத்தக்கறை படிந்த பக்கங்கள்.

இயேசுவை முத்தம் செய்த பொழுது - இயேசு யூதாஸிற்குக் கூறியவார்த்தை, தோழா, நண்பா என அன்பு ஒழுகும் பாசமான வார்த்தை. இயேசு, மனித நேயத்தைக் காட்டும் மாண்பின் நேரம். நீங்கள் என் நண்பர்கள். ஊழியர் என்று சொல்லேன் என்று சீடர்களுக்குக் கூறுகின்றார். அதன்படி முதன் முதலில் தோழா என்று தன்னைக் காட்டி கொடுக்கும் சமயத்தில் கூறுவது, சொல்லும் செயலும் ஒன்றி வாழ்பவர் இயேசு என்பதை தெளிவாகக் காட்டுகிறது. இந்த முத்தச்சத்தம் பைபிளில் மூன்று நற்செய்திகளிலும் எதிரொலித்தது. யூதாஸ் செய்த முத்தத்தால் அன்று முதல் இன்றுவரை நட்பு என்ற போர்வையில் நம்பிக்கை துரோகம் செய்கிறவர்களைக் குறிப்பிட யூதாஸ்'னது பெயரே பயன்படுத்தப்படுகிறது.

இயேசு தன் துயரத்தின் தூரமும் வேதனையின் தாக்கமும் உரோமை மரணத்தின் கொடுமையும் அறியதாவர் அல்ல. ஆனால் துரோகத்தின் வித்து யூதாஸ்'ன் முத்தத்தில் புதைந்து கிடக்கிறது என்று அறிந்த போது தான் துடித்துப் போயிருப்பார். முப்பது வெள்ளிக் காசில் யூதாசும் யூதர்களும் துவக்கிய ஒரு துரோக வரலாறு இயேசுவைக் காட்டிக்கொடுக்கும் அந்த ஒரு முத்தத்தோடு முடிந்து போகும் என்றுதான் வஞ்சக மத குருக்கள் நினைத்தார்கள். புனிதத்தின் வரலாறு அங்கே தான் ஆரம்பமாயிற்று. ஆனால் பணப்பித்தால் பச்சைத் துரோகம் என்னும் பாவத்தைச் செய்தோமே என்னும் மனசின் உந்துதலால் மாசற்ற இரத்தத்தைக் காட்டிக் கொடுத்தேனே என்று சொல்லி யூதாஸ் தானே தன் மரணத்தைத் தழுவிக் கொண்டான். இறைவனால் நியமிக்கப்பட்டவர்களுக்கு விரோதமாகத் துரோகம் செய்ததால் கேவலமான முடிவைச் சந்திக்க நேரிடும் என்பது தெளிவாகிறது. எனவே, பதவி ஆசையும் பேராசையும் நம் கண்களை மறைத்து விட நாம் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. நம்பிக்கைத் துரோகம் என்ற கொடிய குணத்தை அறவே வெறுக்க இந்த கசப்பான அனுபவங்களும் நமக்குப் பெரிதும் உதவும். யூதாஸ்'ன் முத்தத்தின் கறையோடு வரலாறு சொல்லும் நற்செய்திப் பக்கங்களில், இரக்கத்திற்கும் கருணைக்கும் முத்தம் முதலுரை எழுதுவது புதையுண்டு இருக்கிறது. கல்லான இதயங்கள் எல்லாம் கனிவுள்ள இதயங்களாக மாற புதைந்து கிடக்கும் முத்தத்தை நாம் அன்பால் முத்மிடுவோம்.

# இராசிபலன்

**29.03.2024**
**பங்குனி 16, வெள்ளிக்கிழமை**
**சதுர்த்தி பிற்பகல் 6.11 மணிவரை**
**விசாகம் முன்னிரவு 6.33 மணிவரை**

**சுபநேரம் -6.13- 7.43 மணிவரை**
**இராகுகாலம்-10.43-12.13 மணிவரை**
**பெரிய வெள்ளி**

**சந்திராஷ்டமம்**
**உத்தரட்டாதி, ரேவதி**

**வளவன்**

**மேஷம்**
மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பிரயாண பயமுண்டு.

**ரிஷபம்**
புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்**
கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள்.

**கடகம்**
பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை காட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்**
அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**கன்னி**
குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களில் [illegible]

**துலாம்**
உங்களின் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பதவிகளும் பொறுப்புக்களும் வந்து சேரலாம், எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**விருச்சிகம்**
குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வழிபாடு குதூகலம் தரும், சிந்தனை மிகுதியான நாள்.

**தனுசு**
திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தேவையற்ற மனச் சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, சுபவிரயங்கள் மேலோங்கும் நாள்.

**மகரம்**
பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும் பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், கௌரவமான நாள்.

**கும்பம்**
நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் கூடும்.

**மீனம்**
தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுக்கொடுத்து வாழ்வதே இயற்கையின் விதி.

# ஆஸி உயர்ஸ்தானிகர் மன்னார் விஜயம்

(மன்னார்)

இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் சில்வெஸ்டர் வோர்திங்டன் வடக்கு விஜயத்தின் ஒரு பகுதியாக நேற்று வியாழக்கிழமை காலை மன்னாருக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.



இந்த நிலையில் மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் பாதிக்கப்பட்டவர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களை ஒன்றிணைத்து இடம் பெற்ற விசேட சந்திப்பில் கலந்து கொண்டார்.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர்கள் உடன் அவர்களின் எண்ணக் கருத்துக்களையும் கேட்டறிந்தார்.

மேலும் மன்னாரில் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளும் பெண்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (5-6-285)



கிளிநொச்சி மாவட்டச் செயலகமும் மாவட்ட மகளிர் விவகார குழுக்களின் சம்மேளனமும் இணைந்து ஏற்பாடு செய்த மகளிர் தின நிகழ்வு நேற்றுக் காலை குமரபுரம் பகுதியில் இடம்பெற்றது.
இந் நிகழ்வில், ஓய்வுபெற்ற அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன், யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் கோசலை மதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.
(படம்:-சப்தசங்கரி, தேவானந்தம்)

# நினைவுப் பிரார்த்தனையும் இசை அர்ச்சனையும்

(யாழ்ப்பாணம்)

ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப் பாளர் (அழகியல்) சங்கீத பூஷணம் அமரர்.சுப்பையா கணபதிப்பிள்ளையின் 3 ஆவது ஆண்டு நினைவு தினமான இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தொல்புரம் வழக்கம்பரை அம்மன் திருமண மண்டபத்தில் நினைவுப் பிரார்த்தனையும் இசை அர்ச்சனையும் இடம்பெறவுள்ளது. (நி-5-6)

# கற்கை நிலையம் திறப்பு விழா

(சாவகச்சேரி)

தொழில்நுட்ப அறிவுகொண்ட எதிர்கால சந்ததியை உருவாக்கும் முனைப்பில் சாவகச்சேரியில் அமைக்கப்பட்ட முற்று முழுதாக இலவசமான என் கனவு யாழ் அக்கடமி திறப்பு விழா வைபவம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சாவகச்சேரி டச் வீதியில் இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம அதிதியாக என் கனவு யாழ்.அறக்கட்டளையின் ஸ்தாபகரும்-பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கற்கை நிலையத்தை திறந்து வைக்கவுள்ளார்.

மேற்படி கற்கை நிலையம் ஊடாக முதற்கட்டமாக 1200 மாணவர்கள் பயனடையவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5-6-30)



யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் அனைத்துலக நாடக விழா நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெற்றது. (படம்:-சிவசாந்தன்)

# மட்டுவிலில் விபத்து பெண் ஒருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மட்டுவில் வீதியில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற வீதி விபத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மோட்டார்சைக்கிளுக்கு குறுக்கே திடீரென நாய் சென்றதால் இவ் விபத்து சம்பவித்துள்ளது.

இதில் மோட்டார்சைக்கிளில் பயணித்த மட்டுவில் தெற்கைச் சேர்ந்த 44வயதான பெண் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். (நி-5-6-30)

# கண் பரிசோதனை முகாம்

(யாழ்ப்பாணம்)

கண்புரை சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்களைப் பரிசோதனை செய்து தெரிவு செய்யும் கண் பரிசோதனை முகாம் நாளை சனிக்கிழமை காலை 8 மணிதொடக்கம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் நடைபெறவுள்ளது.

இதில் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான கண்புரை சத்திரசிகிச்சை யாழ். போதனா மருத்துவமனையில் முற்றிலும் இலவசமாக செய்யப்படும்.

எனவே கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் மேற்படி கண் பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி [illegible] ஸ்வரன் அறிவித்துள்ளார். (நி-6)






# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 160 | 130 | 200 | 150-180 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 | 165 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 220 | 250 | 150-200 |
| தக்காளி | 50 | 80 | 130 | 150 | 70-100 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 100 | 200 | 100-140 |
| கோவா | 250 | 220 | 280 | 300 | 300 |
| கரட் | 300 | 400 | 350 | 400 | 330 |
| பூசணி | 180 | 160 | 330 | 200 | 100 |
| புடோல் | 160 | 150 | 120 | 120 | -- |
| வாழைக்காய் | 180 | 200 | 120 | 200 | 100-120 |
| சின்ன வெங்காயம் | 200 | 300 | 250 | 250 | 150-280 |
| பெரிய வெங்காயம் | 600 | 550 | 460 | 550 | 500 |
| பாகற்காய் | 350 | 200 | 200 | 250 | 250-300 |
| வெண்டக்காய் | 150 | 200 | 100 | 300 | 100-150 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 200 | -- |
| பயற்றங்காய் | 200 | 300 | 250 | 200 | 200-280 |
| லீக்ஸ் | 300 | 250 | 250 | 300 | 280 |
| பீற்றூட் | 300 | 200 | 250 | 250 | 200 |
| கறிமிளகாய் | 400 | 180 | 200 | 400 | 300-350 |
| முருங்கைக்காய் | 1000 | 800 | 600 | 1000 | 400-700 |
| போஞ்சி | 180 | 200 | 200 | 250 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 80 | 180 | -- |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 40 | 100 | 60 |
| தேசிக்காய் | 150 | 200 | 150 | 300 | 150-250 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 130 | 110 | 80-120 | 50-120 |
| இராசவள்ளி | 400 | 350 | 300 | 400 | -- |
| வெங்காயப்பூ | 180 | 200 | 140 | 400 | -- |
| முள்ளங்கி | 100 | 100 | 100 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 80 | 60 | 80 |
| வல்லாரை | 50 | 40 | 50 | 80 | 100 |
| சரப்புலா | 80 | [illegible] | 120 | [illegible] | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானசார தேரருக்கு

# நான்கு வருட கடூழிய சிறைத் தண்டனை விதிப்பு



(கொழும்பு)

முஸ்லிம் மதத்தை இழிவுபடுத்தும் வகையில் ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்து தொடர்பில் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு 4 வருட கடூழிய சிறைத் தண்டனையும் ஒரு லட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் நேற்று குறித்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே முஸ்லிம் மதத்தை இழிவுபடுத்தும் வகையில் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் கருத்து வெளியிட்டதாக குற்றம் சுமத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## பெயர்மாற்ற அறிவித்தல்

ஏழாலை கிழக்கு ஏழாலையைச் சேர்ந்த இராசதுரை மறேமனா தேவி ஆகிய நான் 29.03.2024 இன்று முதல் எனது பெயரை இராசதுரை-பிறேமனோதேவி எனப் பெயர்மாற்றம் செய்கின்றேன். இனி வரும் காலங்களில் எனது சகல ஆவணங்களிலும் மேற்குறித்த பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகிறேன்.

உண்மையுள்ள,

(281) திருமதி.சிவபாலசிங்கம் பிறேமனோதேவி.

# இராணுவ முகாம் அகற்றப்படாது

## கேப்பாபுலவு போராட்டகாரர்களிடம் இராணுவ உயர் அதிகாரிகள் தெரிவிப்பு

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு பயணம் மேற்கொண்ட இலங்கை இராணுவ தளபதியிடம் தங்கள் கோரிக்கையினை முன்வைக்கவுள்ளதாக தெரிவித்து கேப்பாபுலவு படைத் தலைமையகத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் கவனயீர்ப்பினை வெளிப்படுத்தி நின்ற வேளை இராணுவத் தளபதியினை சந்திக்க போராட்டக்காரர்களுக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தித் தருவதாக இராணுவபுலனாய்வாளர்கள் தெரிவித்த நிலையில் கவனயீர்ப்பு நிறைவுக்கு கொண்டுவரப்பட்டது.

இதற்கமைய மாலை 3 மணிக்கு இராணுவத் தளபதியினை சந்திக்கவுள்ளதாக நேரம் கொடுத்து அதற்காக 5 நபர்களின் பெயர் விபரங்கள், அடையாள அட்டை இலக்கம் என்பன போராட்டகாரர்களிடம் இருந்து எடுக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து கவனயீர்ப்பினை நிறைவிற்கு கொண்டுவந்துள்ளார்கள்.

இந்த நிலையில் மாலை 5 மணியளவில் கேப்பாபிலவு இராணுவ முகாமிற்குள் இருந்து உலங்கு வானூர்தி மூலம் இராணுவத்தளபதி வெளியேறியுள்ளதை அவதானிக்க முடிந்த அதே வேளை போராட்டகாரர்கள் இராணுவத்தளபதியினை சந்திக்க உள்ளே சென்ற போது அங்கு வன்னி பிராந்தியத்தின் உயர் அதிகாரி ஒருவரே சந்தித்துக் கலந்துரையடியுள்ளார்.

குறித்த இராணுவ உயர் அதிகாரி கேப்பாபிலவு இராணுவமுகாம் அகற்றப்படாது என்றும் அந்த பகுதியில் உள்ள மக்களின் காணிகள் எவ்வளவு உள்ளதோ அவ்வளவு காணிகளை முகாமிற்கு அருகில் உள்ள பகுதிகளில் கொடுத்து வீடுகளை கட்டி தருவதாக தெரிவித்துள்ளார். எங்கள் காணிதான் எங்களுக்கு வேண்டும் என்று போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் இது தொடர்பில் குறித்த இராணுவ உயர் அதிகாரி மேல் அதிகாரிகளுடன் கதைத்து முடிவு எடுக்க நேரகாலம் தேவை எனத் தெரிவித்ததாக பேச்சுக்களில் கலந்துகொண்ட கேப்பாபுலவு மக்கள் தெரிவித்துள்ளார்கள். (5-6-299)

## தவறிவிட்டது

எனது தேசிய அடையாளஅட்டை திருநெலவேலி, யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் இராஜவீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் (கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில்) என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**பெயர்: வசந்தராதேவி சண்முகநாதன்**

**அ.அ.இ: 665922081V**

தொடர்புகளுக்கு:

(284) **076 851 0001**

**வலிகாமம் வடக்கு பிரதேச சபை**

## கீரிமலை அம்மாச்சி பாரம்பரிய உணவகத்தில் பாரம்பரிய உணவினை தயாரித்து விற்பனை செய்வதற்கான விண்ணப்பம் கோரல்

சபை நிர்வாகத்தின் கீழுள்ள குறித்த உணவகத்தில் சுயமாக உணவு தயாரித்து விற்பனையில் ஈடுபட ஆர்வமுடைய வலிகாமம் வடக்கு பிரதேசசபை எல்லைக்குள் வதியும் பொருளாதார நலிவுற்ற பெண் தலைமைத்துவ குடும்பத்தைச் சேர்ந்த பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பங்களை வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி) தலைமை அலுவலகத்தில் 2024.04.01 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் அலுவலக நேரத்தில் பெற்று பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2024.04.19 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி) என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நிபந்தனைகள் மற்றும் மேலதிக விபரங்களுக்கு வலிகாமம் வடக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்திற்கு நேரடியாகவோ அல்லது 021 224 1130 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலமோ அணுகி தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்.

செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி).
2024.03.29 (C-0024)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 04 உயரம்: 172Cm
தகைமை/தொழில்: Diploma in DIT, ESBM, Marketing, B.Com (Following)
எதிர்பார்ப்பு: படித்த பெண், வெளிநாடு விரும்பத்தக்கது.
தொ.இ: B/14374

பிறப்பு:1994 இந்து
நட்சத்திரம்: திருகோணம்
உயரம்: 172Cm
தகைமை/தொழில்- BA, விற்பனை முகாமையாளர்.
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/14375

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 04
உயரம் : 5' 8"
தகைமை/தொழில்: Bsc Hons Computer Science and Engineering, Software Engineer
எதிர்பார்ப்பு- விஞ்ஞான பட்டதாரி
தொ.இ: B/14376

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:- BBA(Hons) Accounting
எதிர்பார்ப்பு: படித்த உத்தியோகம் உள்ள பெண்
தொ.இ: B/14378

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1997 கத்தோலிக்கம் (R.C)
நட்சத்திரம்: கார்த்திகை
உயரம் : 5' 8"
தகைமை/தொழில்: Bio System Technology
எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு, உயர் தொழில்.
தொ.இ: G/14275

பிறப்பு-1992 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 30 1/4
உயரம்: 5' 3"
தகைமை/தொழில்: A/L, விகிதர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/14284

பிறப்பு -1990 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 23 1/2
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BA, MA
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: G/14289

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 52
உயரம்: 5'
தகைமை/தொழில்: BA, MA
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்.
தொ.இ: G/14290

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்**

# அகில இலங்கைத் திருமுறை மன்றம்

## பன்னிரு திருமுறைப் பண்ணிசை வகுப்பு

மேற்படி திருமுறைப் பண்ணிசை வகுப்பு பண்ணிசைச் செல்வர் திரு.K.S.R.திருஞானசம்பந்தர் அவர்களால் சிவதொண்டன் நிலையத் திருமுறை மண்டபத்தில் நாளை சனிக்கிழமை (30.03.2024) மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாக உள்ளது. ஒவ்வொரு வாரமும் சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களிலும் மாலை நான்கு மணி முதல் 5.30 மணிவரை இடம்பெறும். இலவசமாக இடம் பெறும் இவ்வகுப்பில் கலந்து பண்ணுடன் ஓதும் தமது திறனை வளர்க்கக் குறிப்பாகப் பாடசாலை மாணவர்களுக்கு இது ஓர் அரிய சந்தர்ப்பம். ஏனைய சைவ அபிமானிகளும் பயிலலாம்.

**குறிப்பு:** மாணவச் செல்வங்களை மேற்படி வகுப்பில் கலந்து பண்ணுடன் திருமுறைகளை ஓதும் திறனை வளர்க்க ஆற்றுப் படுத்துமாறு பாடசாலை அதிபர், ஆசான்களிடம் பணிவுடன் வேண்டுகிறோம்.

**அகில இலங்கை,**
**திருமுறை மன்றம்.** (C-0023)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## சிரியாவில் வான்வழித்தாக்குதல் 15 பேர் உயிரிழப்பு



(தமஸ்கஸ்)

சிரியாவின் கிழக்கு பகுதியில் உள்ள டிர் எஸ் சோர் நகரில் நடத்தப்பட்ட வான் வழித் தாக்குதலில் 15 பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த தாக்குதலானது கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது சிரியாவில் செயற்பட்டுவரும் ஈரான் புரட்சிப்படையின் முக்கிய தளபதி, அவரது 2 பாதுகாவலர்கள், 9 ஈராக் கிளர்ச்சியாளர்கள் உட்பட 15 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் 19 இராணுவ வீரர்கள், 13 பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளதாக கூறப்படுகின்றது.

இந்தத் தாக்குதலை அமெரிக்கா நடத்தியதாக சிரிய பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ள நிலையில் சிரியாவின் குற்றச்சாட்டிற்கு அமெரிக்கா மறுப்புத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## கொலம்பியாவில் 11 கோடி பெறுமதியான போதைப்பொருள் மீட்பு

(பொகோட்டா)

கொலம்பியாவில் கடலில் 4 தொன் எடையுள்ள கொக்கைன் போதைப்பொருளை அந்நாட்டு இராணுவம் கைப்பற்றியுள்ளது.

இதுவே இவ் ஆண்டு கரீபியன் கடலில் கைப்பற்றிய மிகப்பெரிய தொகை கொண்ட கொக்கைன் போதைப் பொருளாகும். அதன் பெறுமதி 11 கோடியே 30 இலட்சம் அமெரிக்க டொலர்களாகும்.

கொலம்பிய கடற்படை, கொலம்பிய விமானப்படை மற்றும் அமெரிக்காவின் தெற்கு கட்டளையின் கூட்டு இடைநிலை பணிக்குழு ஆகியன இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சான் ஆண்ட்ரேஸ் இஸ்லாவுக்கு அருகில் படகில் கடத்திச் செல்லப்பட்ட கொக்கையின்போதைப் பொருளை கைப்பற்றியுள்ளதாக கொலம்பிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இச்சம்பவத்தில் கொலம்பிய பிரஜைகள் மூவரும், ஹோண்டுராஸ் பிரஜை ஒருவரும் வெனிசுலா பிரஜை ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6)




## F-16 ரக ... வழங்க...

மேற்குலக ...

(மொஸ்...
மேற்கு...
போர் வி...
ரஷ்யப்ப...
ரஷ்ய ஜ...
எச்சரிக்...



## ஜேர்மனியில் பேருந்து விபத்து; ஐவர் உயிரிழப்பு



(பேர்லின்)

ஜேர்மனிநெடுஞ்சாலை ஒன்றில் பேருந்து ஒன்று விபத்துக்குள்ளானதில் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் Leipzig நகருக்கருகிலுள்ள நெடுஞ்சாலை ஒன்றில் பயணித்துக்கொண்டிருந்த பேருந்து ஒன்று திடீரென சாலையிலிருந்து வழுக்கிச் சென்று விபத்துக்குள்ளாகியது.

இந்த விபத்தில் 5 பேர் உயிரிழந்துள்ளதோடு பேருந்தில் பயணித்த பலர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

அந்த சாலையில் வேறு வாகனங்கள் எதுவும் இல்லாத நிலையில், எதனால் இந்த விபத்து நேரிட்டது என்பது தெரியவில்லை. பெர்லினிலிருந்து சூரிச் நோக்கிச் சென்று கொண்டிருந்த அந்த பேருந்தில் 53 பயணிகளும், இரண்டு சாரதிகளும் இருந்துள்ளார்கள். இந்த துயர சம்பவம் தொடர்பாக பொலிஸார்விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள். (5-6)

## பரசூட் மூலம் உதவிப்பொருட்களை விநியோகிப்பதை நிறுத்துங்கள்




(காசா)

காசாவில் விமானங்களில் இருந்து பரசூட் மூலம் உதவிப் பொருட்களை விநியோகிப்பதை நிறுத்துமாறு ஹமாஸ் அமைப்பு கோரியுள்ளது. ஹமாஸ் பயங்கரவாத அமைப்பின் இந்த கோரிக்கைக்கு அமெரிக்கா மறுப்பு தெரிவித்துள்ளது.

காசாவில் உணவுப் பற்றாக்குறையால் தவித்துவரும் மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக விமானங்களில் இருந்து பரசூட் மூலம் உதவிப் பொருட்களை விநியோகிக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா உட்பட பல நாடுகள் ஈடுபட்டுள்ளன.

பரசூட் மூலம் வழங்கப்படும் உணவுப் பொதிகளை பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளில் இதுவரை 18 பேர் உயிரிழந்துள்ளனர். இதனால் பரசூட் மூலம் பொதிகளை இறக்குவதை நிறுத்துமாறு ஹமாஸ் அமைப்பு கோரியுள்ளது.

இதற்கு பதிலாக தரை வழியாக அதிகளவு விநியோகங்களுக்கு இஸ்ரேல் அனுமதிக்க வேண்டும் எனவும் ஹமாஸ் கோரியுள்ளது.

இருப்பினும் வான் வழியான விநியோகம் என்பது காசாவில் உள்ள பாலஸ்தீன மக்களுக்கு உதவிகளை விநியோகிப்பதற்காக அமெரிக்கா கையாளும் வழிகளில் ஒன்று எனவும், அதை அமெரிக்கா தொடரும் எனவும் அமெரிக்காவின் ... தெரிவித்துள்ளார். (நி-5-6)

## ஈரானின் அணுசக்தி திட... தடையாக வந்த அ...

(டெஹ்ரான்)

ஈரானின் அணுசக்தி திட்டத்திற்கு எதிராக அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்தமையினால் ஈரான் மற்றும் பாகிஸ்தானுக்கு இடையில் பொருத்தப்பட்டு வந்த எரிவாயு குழாய் திட்டமானது இடையில் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

ஈரானில் இருந்து மலிவான விலையில் எரிவாயு இறக்குமதி செய்ய பாகிஸ்தான் முடிவு செய்தது. இந்நிலையில், இது தொடர்பான ஒப்பந்தத்தில் கடந்த 2009 இல் ஈரான் மற்றும் பாகிஸ்தான் கையெழுத்திட்டன.

குறித்த இந்த ஒப்பந்தமானது முதலில் இந்தியா பாகிஸ்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ...ரக போர்விமானங்களை உக்ரைனுக்கு ...ங்கினால் சுட்டு வீழ்த்தப்படும்

## ...க நாடுகளை எச்சரித்த புடின்



(மாஸ்கோ)

...ற்குலக நாடுகள் உக்ரைனுக்கு F-16 ரக ...ர் விமானங்களை வழங்கினால் அவை ...யப்படைகளால் சுட்டு வீழ்த்தப்படும். என ...ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ...ரிக்கை விடுத்துள்ளார்.



2022ஆம் ஆண்டு பெப் ரவரியில் உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு மேற்குலக நாடுகளுடனான ரஷ்யாவின் உறவுகளில் ஆழமான நெருக்கடியை ஏற்படுத்தியது.

இது 1962 ஆம் ஆண்டு கியூபா ஏவுகணை நெருக்கடிக்குப் பிறகு உருவான பாரிய நெருக்கடியாகும்.

இந்த நிலையில், ரஷ்ய விமானப்படை விமானிகளிடம் பேசிய புடின். 1991 சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பிறகு அமெரிக்க தலைமையிலான இராணுவக் கூட்டணி கிழக்கு நோக்கியும் ரஷ்யாவை நோக்கியும் விரிவடைந்துள்ளது.

ஆனால் நேட்டோ படையைத் தாக்கும் திட்டம் மொஸ்கோவிடம் இல்லை எனத் தெரிவித்தார்.

நாங்கள் சில நாட்டைத் தாக்குவோம் என போலந்து, பால்டிக் நாடுகள் மற்றும் செக் நாடுகள் பயமுறுத்தப்படுகின்றன. இது முற்றிலும் முட்டாள் தனமானது. அவ்வாறான எந்தவொரு தீர்மானத்தையும் ரஷ்யா எடுக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.


மேற்குலக நாடுகள் உக்ரைனுக்கு அனுப்புவதாக உறுதியளித்த F-16 போர் விமானங்கள் பற்றிய கேள்விக்கு அத்தகைய விமானங்கள் உக்ரைனின் நிலைமையை மாற்றாது என்று புடின் பதில் அளித்தார்.

F-16 போர் விமானங்கள் அணு ஆயுதங்களையும் சுமந்து செல்லும் திறன் கொண்டது எனத் தெரிவித்தார்.

பெல்ஜியம், டென்மார்க், நோர்வே மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகள் F-16 விமானங்களை உக்ரைனுக்கு நன்கொடையாக வழங்குவதாக உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

---

## ...தி திட்டத்திற்கு ...அமெரிக்கா



தான் மற்றும் ஈரான் எரிவாயு குழாய் திட்டம் என கருதப்பட்டாலும் இந்தியா அதனை கைவிட்டதால் ஈரான் மற்றும் பாகிஸ்தான் இடையேயான இருதரப்பு திட்டமாக மாறியது.

இதற்காக 1150 கிலோ மீற்றர் நீளமுள்ள எரிவாயு குழாயானது ஈரான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையில் பொருத்தப்பட்டு வந்தது.

ஆனால் ஈரானின் அணு சக்தி திட்டத்துக்கு எதிராக அமெரிக்கா கடந்த ஆண்டு பொருளாதாரத் தடை விதித்தமையினால் பாகிஸ்தான் இந்த திட்டத்தை தற்காலிகமாக கைவிட்டது.

இதனால் தற்போது அமெரிக்காவின் பொருளாதாரத் தடையில் இருந்து விலக்கு பெற முடிவு செய்திருப்பதாக பாகிஸ்தான் பெற்றோலிய துறை மந்திரி முசாதிக் மாலிக் தெரிவித்துள்ளார். (நி-5-6)

## சர்வதேச அழகிப் போட்டியில் முதன்முறையாக சவுதி அரேபியா

(ரியாத்)

சவுதி அரேபியா வரலாற்றில் முதல்முறையாக சர்வதேச அரங்கில் நடைபெறும் அழகிப் போட்டியில் பங்கேற்க முடிவு செய்துள்ளது.

இதன் ஒரு கட்டமாக, பேஷன் துறையில் மிகவும் மதிப்புமிக்கதாகக் கருதப்படும் பிரபஞ்ச அழகி நிகழ்வில் பங்கேற்கத் தயாராக உள்ளார்.

இதற்காக ரூமி அல்கஹ்தானி என்ற 27 வயது அழகி இந்தப் போட்டிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

சவூதி அரேபியா இப்போட்டிகளில் பங்கேற்பது இதுவே முதல் முறையாகும். இந்நிலையில் சர்வதேச அழகிப் போட்டியில் பங்கேற்கும் முதல் சவுதி




இளம் பெண் என்ற பெருமையை ரூமி பெறுவார்.


73 ஆவது மிஸ் யுனிவர்ஸ் போட்டி இந்த ஆண்டு செப்டம்பர் 28 ஆம் திகதி மெக்சிகோவில் நடைபெறவுள்ளது.

தலைநகர் ரியாத்தில் பிறந்த ரூமி மிஸ் மிடில் ஈஸ்ட், மிஸ் அரபு உலக அமைதி 2021 மற்றும் மிஸ் வுமன் ஆகிய பட்டங்களை பெற்றுள் ளமை குறிப்பிடத்தக்கது.(நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய மாணவர் பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்ற வடக்கு மாணவர்கள்





(கொழும்பு)

தேசிய மாணவர் பாராளு மன்ற தேர்தலில் பிரதி சபா நாயகர் மற்றும் பிரதி அமைச்சர் ஆகிய பதவிகளுக்கு வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்து இரு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் நடைபெற்று முடிந்த தேசிய மாணவர் பாராளுமன்ற தேர்தலில் வடமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்திய வவுனியா வடக்கு வலய வ/ கல்மடு ம.வி மாணவன் நாகராசா திலக்சன் பிரதி சபாநாயகராக வெற்றி பெற்றுள்ளார்.

இதேவேளை பாடசாலைகளிற்கிடையில் நல்லுறவைக் கட்டியெழுப்பும் பிரதி அமைச்சராக வடமராட்சி வலயம் யா/ ஹாட்லி கல்லூரி மாணவன் மோகன் அர்ஜுன் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(நி-5-6)

## பண்டிகைக்கால பரிசுகள் எனக்கூறி வலைத்தளங்கள் ஊடாக மோசடி

### அவதானத்துடன் செயற்படுமாறு எச்சரிக்கை

(கொழும்பு)

பண்டிகைக் காலங்களில் பிரபல நிறுவனங்களின் வர்த்தக நாமங்களைப் பயன்படுத்தி சமூக வலைத்தளங்கள் ஊடாக பெரும் மோசடி இடம்பெற்று வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் பொதுமக்களின் தகவல்களைப் பெறும் மோசடி சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக இலங்கை கணனி அவசர பதில் மன்றம் தெரிவித்துள்ளது.


பெறுமதியான பரிசுகள் வழங்கப்படும் என்று கையடக்கத் தொலைபேசிகளுக்கு குறுஞ்செய்தி அனுப்பி தரவுகள் பெறப்படுவதாக அதன் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தம்மபொல குறிப்பிட்டுள்ளார்.

இந்த வருடம் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் மாத்திரம் 200 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

(நி-5-6)

## புதியவகை மின்மினிப் பூச்சிகள் இலங்கையில் கண்டுபிடிப்பு





(கொழும்பு)

இலங்கையில் இரண்டு புதிய வகை மின்மினிப் பூச்சிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ருஹுணு பல்கலைக்கழகத்தின் விலங்கியல் துறையினால் இந்தக் கண்டுபிடிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வலஸ்முல்ல ரம்மாலே வனப்பகுதியில் 2009 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் மூலம் இந்த இரண்டு வகையான மின் மினிப் பூச்சிகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

தெற்காசியாவில் காணப்படும் அரிய வகை மின்மினிப்பூச்சி இனத்தைச் சேர்ந்த இரண்டு இனங்கள் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட் டமை இதுவே முதல் முறையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவற்றில் ஒன்று ருஹுணு பல்கலைக்கழகத்தின் பெயரிலும் மற்றொன்று ரம்மலே வனச்சரகத்தின் பெயரிலும் பெயரிடப்பட்டுள்ளது. (நி-5-6)

## இலங்கையின் சனத்தொகையில் வீழ்ச்சி புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் சனத்தொகையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது. சுதந்திரத்திற்கு பின்னரான வரலாற்றில் முதற்தடவையாக இலங்கையில் சனத்தொகையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக இலங்கை பதிவாளர் திணைக்களத்தின் புள்ளிவிபரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதியுடன் முடிவடைந்த ஓராண்டு காலப்பகுதியில் சனத்தொகையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இலங்கை சனத்தொகை குறித்த காலப்பகுதியில் 144,395 ஆல் குறைவடைந்துள்ளது.

பொருளாதார நெருக்கடி நிலைமைகளினால் நாட்டை விட்டு வெளியேறுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன், பிறப்பு வீதமும் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த காரணிகளினால் நாட்டின் மொத்த சனத்தொகை எண்ணிக்கையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது. (நி-5-6)

## இன்று ஒரு தகவல் 79



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# தாவர இயல்புகள்

அலுவலகம் முடிந்ததும் எல்லோரும் வீட்டுக்குத்தானே போவார்கள்? ஆனால் எனக்குத் தெரிந்த ஒருத்தர் என்ன செய்வார் தெரியுமா? நேராக ஒரு பூங்காவிற்கு போவார். மரத்தடியிலே கொஞ்சநேரம் படுத்துக் கிடப்பார். அதிக நேரம் கழித்துத் தான் வீட்டுக்குப் போவார்.

ஏன் இப்படி என்று கேட்டால். அங்கே தான் எனக்கு நிம்மதி கிடைக்கும் என்பார்!

அப்பப்ப நிம்மதி வேண்டும் என்றால் மனிதன் பூங்காவிற்கு போறான்! நிரந்தரமாக நிம்மதி வேண்டும் என்றால் காட்டுக்குப் போறான்!

காடும் பூங்காவும் நமது கண்ணுக்கு அமைதியாகத்தான் தெரிகிறது! ஆனால் அங்கே உள்ளுக்குள்ளே தீவிரமான ஒரு யுத்தம் நடந்து கொண்டு இருக்கிறது!

மரமும் செடி கொடியும் நமக்கு நிம்மதியைக் கொடுக்கிறது... ஆனால் அவை எல்லாம் நிம்மதியாக இல்லை.

உயிர் பிழைக்கிறதுக்கான போராட்டம் அங்கே தீவிரமாக நடந்து கொண்டு இருக்கிறது. இது சம்மந்தமான விபரங்களை கண்டுபிடிக்கிற போது விஞ்ஞானிகளே ஆச்சரியப்பட்டு போகிறாங்கள்!

தாவரங்கள் எல்லாம் எதிரிகளை விரட்டியடிக்கிறது. நண்பர்களை கவர்ந்து இழுக்கிறது!

இதற்காக அவை எல்லாம் வேதியல் பொருட்ளைப் பயன்படுத்ததுகிது. ஒரு தாவரத்திற்குப் போட்டியாக இன்னொரு தாவரம் வளர்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள்.

உடனே விஷேசமான ஒரு வேதியல் பொருளை உபயோகப்படுத்தி அதை விரட்டி விடுகிறது இல்லையென்றால் அழித்து விடுகிறது!

இந்த வகையிலே தாவரங்களின் சாதுரியம், சமயோசிதம், சாமர்த்தியம் இதையெல்லாம் பார்த்தால் ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறது.

இதையெல்லாம் பற்றி ஆராய்வதற்கு ஒரு புது அறிவியல் துறையே உருவாகியிருக்கிறது.அதற்குப் பெயர் அல்லோபதி!

ஒரு செடியிடம் போய் ஏன் இப்படி அடித்துக் கொள்கிறீர்கள் என்று கேட்டா அது என்ன சொல்லும் தெரியுமா?

வாய் இருந்தா இப்படித்தான் சொல்லும்!

உங்களுக்கு என்ன சுலபமா, கேட்டுவிட்டீர்கள்... எங்கள் கஷ்டம் எங்களுக்குத்தான் தெரியும்! பிராணிகளுக்கு எல்லாம் ஒரு ஆபத்து வந்தால் உடனே ஓடிப்போய்விடுகிறது... பறவையாயிருந்தால் பறந்து போய் விடுகிறது. எலி என்றால் வளைக்குள் மறைந்து ஓடிப் போய் விடுகிறது. நாம் என்ன செய்ய முடியும். சுவரில் ஆணி அடிச்ச மாதிரி பூமியில நின்றுகொண்டு இருக்கிறோம். எங்களால் ஓடமுடியுமா? நகர முடியுமா. நின்ற இடத்திலேயே தான் நாம் ஆகாரத்தை தேடணும். இருந்த இடத்தை விட்டு அசையாமல் தான் எதிரிகளிட்ட இருந்து நம்மள காப்பாற்ற வேண்டும் என்று புலம்ப ஆரம்பித்து விடும்.

அதுவும் நியாயம் தானே. நமக்கு ஒரு ஆபத்து வந்தால் ஒன்றும் முடியவில்லை என்றாலும் ஓடியாவது போய் விடலாம். தாவரங்கள் எல்லாம் என்ன செய்யும். அது தான் தவரங்கள் எல்லாம் சூரியஒளியைப் பயன்படுத்தியே ஆகாரத்தை தயார் செய்கிறது. தாவரங்கள் எல்லாம் உயிர் வாழ்தற்கும் இனத்தை பெருக்குவதற்காகவும் சில ஆயுதங்களை வைத்திருக்கிறது. முள், செதில் இது எல்லாம் தான் அதனுடைய ஆயுதம். அதை தவிர தற்காப்புக்காக சில இரசாயணங்களையும் அது வைத்திருக்கிறது. தாவர நச்சுககள் சிலது இருக்கிறது- phytotoxins ஒலியாண்டர் என்று புதர்ச் செடி. இதனுடைய சாறு கொடிய விஷம். அந்த செடியுடைய ஒரு இலையை தின்றால் கூட மனிதன் அவ்வளவு தான். செத்துப் போய் விடுவான். மிசில்டோ என்று ஒரு செடி. அந்த மரத்தினுடைய ஒரு பழத்தை சாப்பிட்டாலும் கூட மாடு அவுட். இவ்வாறு எவ்வளவோ விஷச்செடிகள் வயலிலும் காடுகளிலும் இருக்கிறது.

தாவரங்கள் போட்டியாக வளருகின்ற தாவரங்களை அழிக்க களைக்கொல்லி மாதிரியான ரசயானத்தை பயன்படுத்துகிறது. பூச்சிகளை கொல்லுவதற்கு பூச்சி கொல்லி மாதிரியான ரசாயனத்தை உருவாக்கிறது.

ஆனால் ஒரு தாவரம் எதிரியைக் கொன்று தான் தீரணும் என்றுமில்லை. எதிரியை பலவீனப்படுத்துவதோட சரி. புகயிலைச் செடி நிகோடினை உற்பத்தி செய்கிறது. இந்த செடியின் வாசனை பட்டாலே வண்டுகள் செயலிழந்துவிடும். ஓக், பைன் இதோட இலைகளில் டானின் நிறைய இருக்கிறது . சாகபட்சினிகள் இந்த இலையைத் தின்றால் அவ்வளவு தான்.அதில் இருக்கிற டானின் அமிலம் பிராணிகள் வயிற்றிலே மாற்றங்களை ஏற்படுத்தி இலைகளை ஜீரணிக்க முடியாமல் செய்து விடும்.

ஒரு பூச்சி ஓக் இலையை தின்று கொண்டு இருந்தால் அது உடம்புக்கு தேவையான ஊட்டம் கிடைக்காமலே வலுவிழந்துவிடும்.

சில தாவரம் பூச்சிக்கு போதையை உண்டாக்கிவிடும். இதைத்தவிர இனப்பெருக்கத்திற்கு சில ரசாயணங்களை உற்பத்தி செய்கிறது.

மரங்கள் ஒன்றுக்கு ஒன்று ஒத்தாசை செய்வதும் உண்டு. சிவப்பு ஆல்டர் என்று ஒரு மரம். வில்லோ என்று ஒரு மரம். இந்த மரங்களை கம்பளிப்புழு தாக்குகிறது என்று வைத்து கொள்ளுங்கள். உடனே இது எச்சரிக்கை ரசாயனத்தை பரப்புகிறது. பக்கத்தில இருக்கிற மரங்கள் இதைப் புரிந்து கொண்டு எச்சரிக்கை ஆகிறது. அது எல்லாம் தன்னுடைய இலைகளில் கூடுதலாக டானின்களை நிரப்பிக்கிது. இதனாலே புழுப் பூச்சிக்கு அந்த இலையை சாப்பிடும் ஆசையே இல்லாமல் போய் விடுகிறது.

அதனாலே மரம்; செடி, கொடி எல்லாம் நிம்மதியாக இருக்கிறது என்று நினைத்துக் கொண்டு அதைப்பார்த்து யாரும் பொறாமைப் பட வேண்டாம்.

அலுவலகம் முடிந்தவுடனே மரத்தடியில் உட்காரலாம் என்று நினைக்கிறவர்கள் எல்லாம் இனி மேல் துணிந்து போய் வீட்டிலேயே உட்கார்ந்து விடுங்க சார்.

அப்புறம் ஆபத்து என்றால் மரமாக இருந்தா ஓட முடியாது.

நீங்க அப்படி இல்லையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி விளாங்குளம்-பாண்டியன் குளம் வீதியினை புனரமைப்பு செய்து தாருங்கள்

## அப் பகுதி மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கின் முதன்மை வீதி யான வன்னி விளாங் குளத்தில் இருந்து பாண் டியன் குளம் வரையான வீதி புனரமைக்கடாமல் உள்ளதாக அப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

குறித்த வீதியால் பய ணிக்கும் மக்கள் மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் பயணித்து வருகின்ற னர்.

சம்பந்தப்பட்ட அதிகா ரிகள் குறித்த வீதியை புனரமைப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண் டும் என அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள் ளனர். (நி-5-6-350)

# ஒட்டு சுட்டானில் இடம்பெற்ற புத்தரிசி விழா



(அக்கராயன்)

கமநல அபிவிருத்தி திணைக்களத் தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட் டத்தில் "புத்தரிசி பெருவிழா" நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டு சுட்டான் கமநல சேவை நிலையத்தில் மாவட்ட கமநல அபிவிருத்தி திணை க்களத்தின் உதவி ஆணையாளர் ஆர்.பரணிகரன் தலைமையில் நடை பெற்றது.

இந் நிகழ்வில் முல்லைத்தீவு மாவ ட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த துடன் புத்தரிசி தானம் வழங்கும் நிக ழ்வினை ஆரம்பித்து வைத்தார்.

மேலும் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி ச.யாமினி, ஒட்டு சுட்டான் உதவிப் பிரதேச செயலாளர், ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலைய பொறு ப்பதிகாரி, கமநல அபி விருத்தி உத்தியோகத்த ர்கள், விவசாய போதனாசி ரியர், ஏனைய உத்தியோ கத்தர்கள், கமக்கார அமை ப்பின் பிரதிநிதிகள், விவ சாயிகள் எனப் பலரும் கல ந்து கொண்டனர்.(5-6-350)


**லங்கா மஹால் (PVT) LTD**

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(252)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
0091956615 6719


WESTERN UNION WU · MoneyGram · Ria MONEY TRANSFER

வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974



**தென்மராட்சி - அல்லாரை பண்டாரி தறைப்பிள்ளையார் ஆலயம் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா - 2024**



சோபகிருது வருடம் பங்குனி மாதம்
16 ஆம் நாள் 29.03.2024 வெள்ளிக்கிழமை
முற்பகல் 10.45 தொடக்கம் பிற்பகல் 1.30
வரையுள்ள விசாக நட்சத்திரமும் சித்தயோகமும்
கூடிய சுப முகூர்த்த வேளையில்
அல்லாரை பண்டாரித்தறைப்
பிள்ளையாருக்கு புதிய சித்திரத்தேர்
வெள்ளோட்டம் நடைபெறவுள்ளது.

தேர் நிர்மாணிப்பு
விஷ்வப் பிரம்மஸ்ரீ
"சிற்பக்கலை வேந்தன்" இரத்தின சிங்கம் சத்தியஸ்ரீ
ஸ்ரீமங்களா சிற்பாலயம், இருபாலை

அடியார்கள் அனைவரையும் இந் நிகழ்வில் பங்குபற்றி
விநாயகரின் பேரருளைப்பெற்றேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(287)

தேர்த்திருப் பணிச்சபை


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3074

நாராயணி




றதீஸ்




மல்லிகா





தனுப்பிரியா




அர்ச்சுன்




ராகவி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 441





அதிலிருந்து இரத்தம் கொட்டிக்கொண்டிருந்தது. இளவரசர் ஓடி வந்தார். 'ஐயோ! எனக்காக உயிர் துறக்கிறாயா?' என்று கேட்டார். பூங்குழலியின் உள்ளம் பூரித்து நெஞ்சிலிருந்து இரத்தம் அதிகமாகப் பீறிட்டு வந்தது. இளவரசர் அவளை வாரி எடுத்துத் தம் மடியில் போட்டுக்கொண்டார். அவளுடைய நெஞ்சிலிருந்து பெருகிய இரத்தம் அவர் உடம்பையும் உடைகளையும் நனைத்தது. பூங்குழலி கலகலவென்று சிரித்தாள். 'இளவரசே! இப்போதாவது என் நெஞ்சில் உள்ளது என்னவென்று தெரிந்து கொண்டீர்களா?' என்று கேட்டாள். 'அடிப்பாவி! அது எனக்கு முன்னமே தெரியும்? இதற்காகவா உயிரை விடுகிறாய்?' என்று இளவரசர் அலறினார். பூங்குழலிக்கு ஆனந்தம் தாங்கவில்லை. உரத்த சத்தம் போட்டுச் சிரித்தாள்!

"ஏ பைத்தியமே!" என்ற குரலைக் கேட்டுப் பூங்குழலி நிமிர்ந்து பார்த்தாள். எதிரில் வந்தியத்தேவன் நின்று கொண்டிருந்தான்.

"இளவரசர் ஏற்கெனவே கோபமாயிருக்கிறார் பிரயாணம் தாமதப்படுகிறது என்று. உன்னால் வேறு தாமதம் வேண்டாம். சீக்கிரம் எழுந்து வா!" என்றான் வந்தியத்தேவன்.

பூங்குழலி சிரித்துக் கொண்டு எழுந்து ஓடிப்போய் யானையின் மீது ஏறிக்கொண்டாள். கத்தியை நெஞ்சுடன் அணைத்துக் கொண்டு கொஞ்சினாள்.

காட்டு வழியில் மேலும் கொஞ்சத்தூரம் சென்ற பிறகு எதிர்பாராத ஒரு சம்பவம் நிகழ்ந்தது. பிரயாணிகள் வலது பக்கமிருந்த அடர்ந்த காட்டிலிருந்து 'விர்' என்ற சத்தத்துடன் ஒர் அம்பு பாய்ந்து வந்தது.

இளவரசரைக் குறி பார்த்து அது எய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. ஆனால் அந்த அம்பைவிட வேகமாக இளவரசர் குதிரையின் கயிற்றை இழுத்துத் திருப்பினார். அம்பு அவருக்கு வெகு சமீபமாக சென்று, அவருக்கு அப்பால் வந்து கொண்டிருந்த ஆழ்வார்க்கடியானுடைய தலைப்பாகையில் பாய்ந்து அதைக் கொத்திக் கொண்டு சென்றது.

ஆழ்வார்க்கடியான் தலையைத் தடவிக்கொண்டு வியப்புடன் பார்த்தான்.

சேனாதிபதி பூதிவிக்கிரம கேசரி திடுக்கிட்டுப் போய் விட்டார். எல்லாருமே திகைத்து நின்றார்கள்.

பூங்குழலியோ அந்த அம்பு தன் பேரில் விழுந்து தன்னைக் கொன்று விடவில்லையே என்று வருத்தப்பட்டாள்.

சிறிது திகைப்பு நீங்கிய பிறகு சேனாதிபதி, "இளவரசே! பார்த்தீர்களா? தங்களைப் பாதுகாப்பின்றித் தனியே அனுப்பியிருந்தால் எவ்வளவு பிசகான காரியமாயிருக்கும்?" என்று சொல்லிவிட்டுக் காவலுக்கு வந்து வீரர்களைக் காட்டுக்குள் புகுந்து தேடச்சொன்னார். அவர்கள் சிறிது நேரம் தேடிவிட்டுத் திரும்பி வந்து, யாரும் அகப்படவில்லை" என்றார்கள்.

சேனாதிபதி மேலே பிரயாணத்தைப் பற்றி ஏற்பாடு செய்யத் தொடங்கினார். இளவரசரை நடுவில் நிறுத்தி நாம் நாலு புறமும் சூழ்ந்து வர வேண்டும் என்று கூறி, வியூகம் வகுக்க ஆரம்பித்தார்.

அப்போது இளவரசர், "சேனாதிபதி! ஒரு வேண்டுகோள்" என்றார்.

"இது என்ன வார்த்தை? கட்டளையிடுங்கள்!" என்றார் சேனாதிபதி.

"நான் உயிரோடு தஞ்சை செல்ல விரும்புகிறேன். நான் குற்றமற்றவன் என்பதை என் தந்தையிடம் மெய்ப்பிக்க விரும்புகிறேன்."

தங்கள் தந்தை ஒருநாளும் சந்தேகிக்கமாட்டார் இளவரசே?"

தந்தை மட்டுமல்ல மக்கள் எல்லோரும் ஒப்புக் கொள்ளும்படி நிரூபிக்க விரும்புகிறேன். அந்தக் காரியத்தை நிறைவேற்றிய பிறகு என் உயிரைப் பற்றிச் சிறிதும் கவலைப்படமாட்டேன். அதற்கு முன்னால் வழியிலேயே உயிர் துறக்க விரும்பவில்லை.

"ஐயா! தங்கள் உயிருக்கு ஆபத்து வருவதாயிருந்தால் அந்தக்கணமே இந்தக் கொடும்பாளூர் வாளை என் நெஞ்சிலே செலுத்திக் கொள்வேன்."

அதில் ஒன்றும் பயனில்லை. சோழநாடு மகத்தான நஷ்டம் அடையும்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## சிறுவனின் உபதேசம்

ராஜவர்மன் விஜயபுரியின் அரசன் . அவனுக்குத் தான் அரசனாகவும் இருக்க வேண்டும் அதே நேரத்தில் ஆன்ம இலாபம் தரும் ஞான வினையையும் கற்றுக் கொள்ள வேண்டும் என்னும் தணியாத ஆவல்.

உடனே மந்திரியைக் கூப்பிட்டு நம் நாட்டில் உள்ள குருமார்கள் இங்கு அரண்மனைக்கு வந்து தங்களுக்குத் தெரிந்த ஞான வித்தைகளை எனக்குப் பயமின்றி உபதேசிக்கலாம். அப்படி செய்யும் உபதேசங்களில் என் மனதைக் கவரும் உபதேசம் எதுவோ அதற்கு, உபதேசித்தவர் கேட்பதைப் பரிசிலாகத் தருவோம் என பறையறிவிக்கச் சொன்னான்.



வாயிலில் ஒரு ஆராய்ச்சி மணியையும் கட்டினான். வந்தவர்கள் மணியை அடிக்க மந்திரி அவர்களை அழைத்துப் போய் நீராட, உண்ண, உடுக்க எல்லா வசதிகளையும் செய்துகொடுத்து அரசவைக்கு அழைத்துச் செல்வார்.

இதைக் கேள்வியுற்ற குருமார்களும் அறிஞர்களும் அரசவை சென்று தங்களுக்குத் தெரிந்தவற்றை உபதேசிக்க மன்னனுக்குத் திருப்தி இல்லை. அவர்களையெல்லாம் விருந்தினர் மாளி[illegible] சிறைவைத்து விட்டான்.

அந்த நாட்டிலுள்ள ஒரு சிற்றூரில் அட்ட கோணலுடன் விகாரமான சிறுவன் இருந்தான். பள்ளியில் படிக்கும் மாணவர்கள் அவனை உன் தந்தை யாரெனக் கேலிபேச, வீட்டுக்கு வந்தவன் அன்னையிடம், "என் தந்தை எங்கே?" எனக் கேட்டான். "அப்பா மகனே! உன் தந்தையை அரசன் சிறை வைத்துள்ளான்" என முழுக் கதையையும் கூற,

"அம்மா! நான் போய் அப்பாவை மீட்டு வருகிறேன்" எனத் தாய் தடுத்ததையும் மீறிக் கிளம்பி அரசவை வந்தான். அவன் உருவையும், வயதையும் கண்டு எல்லோரும் எள்ளி நகையாடினார்கள்.

எல்லோரும் நகைத்ததைக் கண்ட சிறுவன் அரசனை நோக்கி, "ஏன் சிரித்தீர்கள்? என் உருவைக் கண்டா? அல்லது சிறுவனா நமக்கு உபதேசம் செய்யப் போகிறான்? என்று என் வயதைக் கண்டா?" என்று கேட்டான்.

ஒருவரும் பதில் பேசவில்லை.

பின்னர் அரசனை நோக்கி, "அரசே! ஏன் நகைத்தீர்? குயவனைப் பார்த்து நகைத்தீரா? அல்லது பாண்டத்தைப் பார்த்து நகைத்தீரா? என வினவினான். அரசனுக்குக் குயவன் என்றால் யார்? பாண்டம் என்றால் எது? எனப் புரியவில்லை.

சிந்தை மருண்ட மன்னனோ உடனே சிறுவனை நோக்கி, "எனக்கு ஞான உபதேசம் செய்வித்து அருளல் வேண்டும் தங்களின் சித்தம் என்னவோ அது போல் நான் நடக்கிறேன்" எனக் கேட்டுக் கொண்டான்.

அதற்கு, சிறியவன், "அரசே! நீ உனக்குச் சொந்தமாக எண்ணியிருப்பதை எனக்குத் தானம் செய் பின்னர் உபதேசிக்கிறேன்" என்றான். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். ~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஒரு சாரதியின் உத்தரவாதம் இல்லையாயின் படித்தென்ன பயன்

ஒரு கணப்பொழுதில் நடந்த விபத்தில் முல்லைத்தீவு சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் கு.அகிலேந்திரன் உயிரிழந்துபோன சம்பவம் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஒரு வீதி விபத்து அருமந்த மருத்துவரின் உயிரை ஒரு சில மணித்துளிகளில் காவு கொண்டுள்ளது.

ஆம், வீதி விபத்துக்கள் பற்றி இவ்விடத்தில் பல தடவைகள் எழுதியாயிற்று.

நேற்று முன்தினம் (27) மட்டும் இரண்டு பேர் டிப்பர் வாகனம் மோதியதில் உயிரிழந்து போயுள்ளனர். அதில் ஒரு விபத்து வவுனியா ஏ9 வீதியிலும் மற்றையது யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவனிலும் நடந்துள்ளது.

இவ்விதம் வீதி விபத்துக்கள் அருமந்த மனித உயிர்களை நாள்தோறும் காவுகொள்கிறதாயினும் அதுபற்றி எவரும் இன்னமும் சிந்திப்பதாக இல்லை.

ஒரு மாகாணத்தின் எல்லைக்குள் நடந்தேறும் வீதி விபத்துக்களால் நாள்தோறும் மூன்று நான்கு மனித உயிர்கள் பலியாகின்றன எனும்போது, அங்கு ஏதோ சிக்கலும் பிரச்சினையும் உண்டென்பது உணர்தற்குரியது.

உண்மை. வடபகுதியைப் பொறுத்தவரை சாரதிகளில் பெரும்பாலானவர்கள் வீதி விதிமுறைகளைப் பின்பற்றுவதாக இல்லை.

தவிர, அநேகமான சாரதிகள் கையடக்கத் தொலைபேசியில் உரையாடிய வண்ணமே வாகனங்களை ஓட்டுகின்றனர்.

இதுதான் என்றால் இல்லை. தனியார் பஸ்களும் போக்குவரத்துச் சபை பஸ்களும் ஒன்றையொன்று துரத்திச் செல்கின்ற அநியாயம் ஒருபுறம்.

மது அருந்திவிட்டு வாகனங்களைச் செலுத்துகின்ற சாரதிகள் மறுபுறம்.

இதற்கும் மேலாக, சண்டித்தனத் திமிருடன் வாகனங்களை ஓட்டுகின்ற சாரதிகளின் அநியாயம் சொல்லிமாளா.

இதையும் கடந்து, விபத்து மரணங்கள் தொடர்பில் விபத்து மரணத்தை ஏற்படுத்தியவரை தண்டிப்பதில் சட்டம் இன்னமும் வலுவானதாக இல்லை.

உண்மையில் தவறான சாரத்தியத்தின் காரணமாக ஓர் உயிரிழப்பு ஏற்படுமாயின், அதனைக் கொலைக்குற்றமாகவே கருத வேண்டும்.

ஆனால் விபத்தின் மூலம் மரணத்தை ஏற்படுத்தியவர் சிறைத் தண்டனையும் இன்றி குற்ற உணர்வுமின்றி சர்வசாதாரணமாக நடமாடுகிறார்.

ஆக, இத்தகைய நிலைமைகள் விபத்துக்களை இன்னமும் தூண்டுவதாக அமைகின்றன.

ஆகவே இது விடயத்தில் எங்கள் கற்றறிந்த சமூகம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

ஆம், எவ்வளவுதான் படித்தாலும் எந்தப் பதவியில் இருந்தாலும் அவரின் உயிருக்கு ஒரு சாரதி உத்தரவாதம் வழங்க வேண்டிய மிக மோசமான களநிலைமை நம் மண்ணில் மட்டுமே உண்டு.

எனவே நம் பெரியவர்கள் இதுபற்றி சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.

# க.பொ.த சாதாரண தரப்பரீட்சையின் பின்னரான விடுமுறை இனி இல்லை

## கல்வி அமைச்சர்

(கொழும்பு)

கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை நிறைவடைந்ததும் உடனடியாகவே, மாணவர்களுக்கு உயர்கல்வி வகுப்பை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

சாதாரண தர பரீட்சையில் தோற்றியதன் பின்னர் பெறுபேறுகள் வரும் வரையான நான்கு மாத காலப்பகுதியில் அந்த மாணவர்கள் வேறு விடயங்களுக்கு உட்படுகின்றனர்.

புதிய வேலைத்திட்டத்தின் மூலம் மாணவர்கள் தொடர்ச்சியாக கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட முடியும்.

க.பொ.த சாதாரண தர பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்படுவதற்கு முன்பதாக க.பொ.த உயர் கல்விக்கான வகுப்புகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (நி-5-6)

# ஒருவரின் அத்தியாவசிய தேவைக்கு மாதாந்தம் ரூ.17,014 அவசியம்

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கான வறுமைக்கோடு தொடர்பான புதிய அட்டவணையை தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

அதற்கமைய, இலங்கையர் ஒருவரின் குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக மாதாந்தம் 17,014 ரூபாய் அவசியம் என அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேசிய மட்டத்தில் இந்த தொகை அறிவிக்கப்பட்டிருந்தாலும் மாவட்டங்கள் தோறும் இந்த தொகையில் மாற்றம் ஏற்படுகின்றது.

கொழும்பு மாவட்டத்தில் தனிநபரின் மாதாந்த செலவு 18,350 ரூபாவாக காணப்படுகின்றது.

இதற்கமைய, இலங்கையிலுள்ள 25 மாவட்டங்களில் அதிக செலவீனத்தைக் கொண்ட மாவட்டமாக கொழும்பு மாவட்டம் அமைந்துள்ளது.

குறைந்த செலவீனத்தைக் கொண்ட மாவட்டமாக மொனராகலை மாவட்டம் பதிவாகியுள்ளது. (நி-5-6)

# அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்ட ஐந்து பேருக்கு எதிராக சட்டநடவடிக்கை

(கொழும்பு)

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்ட ஐந்து பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவானது கொழும்பு மேல் நீதிமன்றில் HCB 271/2024 என்ற வழக்கு இலக்கத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக சட்ட நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்கவினால் கடந்த 26 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு கிரீஸ் நாட்டில் கடும் நிதி நெருக்கடி ஏற்பட்டிருந்த போது அந்நாட்டு அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட திறைசேரி உண்டியல்களை மத்திய வங்கி கொள்வனவு செய்தமை தொடர்பில் முறைப்பாடு முன்வைக்கப்பட்டிருந்தது.

கிரீஸ் எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடியை அறிந்திருந்தும் மேற்கொள்ளப்பட்ட இந்த கொள்வனவினால் 2000 கோடி ரூபாவிற்கும் அதிகமான நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக சேனசிங்க தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், அஜித் நிவாட் கப்ரால், கங்கணம்கே கமகே டொன் தர்மசேன தீரசிங்க, பெந்தரகே டொன் வசந்த ஆனந்த சில்வா, சந்திரசிறி ஜயசிங்க பண்டித சிறிவர்தன மற்றும் ஹரங்கஹா ஆராச்சிலகே கருணாரத்ன ஆகியோருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது. (நி-5-6)

# மாந்தை நட்டாங்கண்டல் 3 ஆம் வீதி புனரமைப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கில் நட்டாங்கண்டல் கிராமத்தில் உள்ளக வீதி ஒன்று மாந்தை கிழக்கு பிரதேச சபையினால் மாகாணத்தால் குறித் தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி ரூபா.7.5 மில்லியன் செலவில் குறித்த வீதி புனரமைக்கப்படுகின்றது.

மாந்தை கிழக்கில் உள்ளக வீதிகள் புனரமைக்கப்பட வேண்டும் என தொடர்ச்சியாக பொது மக்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டு வரும் நிலையில் நட்டாங்கண்டல் 3 ஆம் வீதியே தற்போது புனரமைப்பு பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.(நி-4-5-350)

# நினைவுப் பகிர்வு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர், இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நினைவுப் பணி மன்றங்கள் இணைந்து நடத்தும் நினைவுப் பகிர்வு நாளை பி.ப 3.30 மணிக்கு திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையத்தில் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் வரவேற்புரையினை யாழ். பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தி.செல்வமனோகரனும் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் நினைவுப் பகிர்வை யாழ்.பல்கலைக் கழக இந்துக் கற்கைகள் பீட பீடாதிபதி பிரம்மஸ்ரீ. ச.பத்மநாபன் மற்றும் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நினைவுப் பகிர்வை தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை சிரேஷ் விரிவுரையாளர் கலாநிதி.க.இரகுபரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (5-6)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

சுகாதார அமைச்சின் துணை மருத்துவ சேவையின் பயிற்சி நெறிகளுக்கு மாணவர்களை ஆட்சேர்த்தல் -2024 விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாடசாலை பற்சிகிச்சையாளர், சுகாதார பூச்சியியல் அலுவலர், இதயத்துடிப்பு பதிவாளர், பொதுச் சுகாதார ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் மற்றும் மருந்து கலவையாளர் ஆகிய கற்கை நெறிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரபபட்டுள்ளது.


விண்ணப்பப்படிவங்களின் இறுதித் திகதி 2024.04.25 ஆகும். எனவே மேலதிக தகவல்களுக்கு அமைச்சின் (www.health.gov.lk) எனும் இணையத்தின் ஊடாக அறிந்து கொள்ள முடியும் என சுகதார அமைச்சு அறிவித்துள்ளது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

33



மேலும் அரச கரும மொழிகள் கொள்கை விடயத்தில் அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்குவதற்கு என ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையில் ஒரு தெரிவுக்குழுவையும் அமைக்கவேண்டும் என்ற தனது கருத்தையும் பண்டாரநாயக்கா முன்வைத்தார்.

எனினும் தமிழ்மொழிக்கு அரச அந்தஸ்துகொடுப்பது தொடர்பில் பின்னரான காலத்தில் அவர் தயக்கத்தை வெளிப்படுத்தியதுடன் தமிழ்மொழியை அரசகரும மொழியாக்குவதில் பண்டாரநாயக்கா தளர்ந்த கொள்கையையே கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் சிங்கள கலாசாரத்தையும் சிங்களச் சமுதாயநலன்களையும்மேம்படுத்துவதற்காக பண்டாரநாயக்கா உருவாக்கியிருந்த சிங்கள மகாசபை எனும் அமைப்பானது தமிழருக்கும் தமிழ் மொழிக்கும் எதிரான கொள்கைகளை சிங்கள மக்கள் மத்தியில் பலமாகப் பரப்பியிருந்தது என்பது நோக்கத்தக்கது.

**சிங்கள மொழிகற்பதில் தமிழர்களுக்கு இருந்த ஆர்வம்**

1938 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திலிருந்த தரமான இந்துப் பாடசாலைகளில் சிங்கள மொழியும் ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டது. அக்காலத்தில் இந்துப் பாடசாலைகளில் படிப்பித்த தமிழ் ஆசிரியர்களுக்கும் சிங்கள மொழியைக் கற்பிப்பதற்கு கல்விசார் இந்துசபை நடவடிக்கை எடுத்தது. 1940களில் கல்விசார் இந்துசபை, இந்துப் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் சிங்கள மொழி ஒரு பாடமாகக் கட்டாயமாக கற்பிக்கப்படல் வேண்டுமென்பதை ஒரு கொள்கையாகக் கொண்டிருந்தது.

1938ஆம்ஆண்டு டிசெம்பர் 22 ஆம் திகதி வடமாகாண ஆசிரியர் சங்கம் இலங்கையிலுள்ள சகல பாடசாலைகளிலும் சிங்களமும் தமிழும் கட்டாயமாகக் கற்பிக்கப்படல் வேண்டும் என்ற தீர்மானத்தை எவ்வித எதிர்ப்புமின்றி நிறைவேற்றியது. 1939 இல் இத் தீர்மானத்தை யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் ஆமோதித்தது. இவை சிங்கள மொழி கற்பதில் தமிழர்களுக்கு இருந்த ஆர்வத்தைக் காட்டுகிறது. தமிழுக்கு சம அந்தஸ்து கொடுத்தால் சிங்கள மொழி அழிந்துவிடும் என்ற பயம் சிங்கள மக்களிடையே இருந்ததாகவும் கூறப்படுகிறது.

**ஜே.ஆர்.ஜெயவர்த்தனா குழு**

பண்டாரநாயக்கா கூறியது போன்று அரசகரும மொழிகள் கொள்கை விடயத்தில் அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்குவதற்கு என ஜே.ஆர். ஜெயவர்த்தனா தலைமையில் 1946 இல் சுயமொழிக் கொள்கைதொடர்பில் குழு நியமிக்கப்பட்டது. ஜே.ஆர். ஜெயவர்த்தனா தலைமையிலான இத் தெரிவுக் குழு தனது அறிக்கையில் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய சுதேசிய மொழிகளை அலுவலக மொழிகளாக ஏற்றுக் கொள்வதற்கான தனது விருப்பத்தை பலமாக வெளிப்படுத்தியதுடன் 10 ஆண்டு காலத்தில் படிப்படியாக இந்த மாற்றம் இடம்பெற வேண்டும் என்பதையும் பரிந்துரை செய்தது.

**சிங்கள மக்களிடையே சிங்களம் மட்டும் என்ற எண்ணம் தோன்றல்....**

1948 ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி கொழும்பு நகரசபை மண்டபத்தில் ஹேவாஹவுஸ் சங்கத்தின் ஆதரவில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. தேசிய பிரதிநிதிகள் சபை உறுப்பினர் எச்.ஸ்ரீநிசங்க இதற்குத் தலைமைதாங்கினார். மிக முக்கியமான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காகவே இந்தக் கூட்டம் கூட்டப்பட்டிருந்தது.

இலங்கையின் எதிர்கால அரசியல் போக்கை நிர்ணயிப்பதற்கான ஒரு கூட்டமாக இது அமையும் என்பதை இதில் கலந்து கொண்டவர்கள் உணர்ந்து கொண்டிருப்பார்களோ தெரியாது.

இங்குஉரையாற்றிய எச்.ஸ்ரீநிசங்க முக்கியமாகக்குறிப்பிட்டது இதனைத்தான். "அரசாங்கம் சிங்களத்தையே தேசியமொழியாக்கி இங்குள்ள அனைவரையும் சிங்களத்தையே பேசுமாறு வலியுறுத்த வேண்டும். 1815 இல் பிரித்தானியர் கண்டியைக்கைப் பற்றிய பின்னர் ஆங்கிலமே ஆட்சி மொழியாக்கப் பட்டது. இப்போது சிலர் சிங்களத்தை ஆட்சிமொழியாக்க முடியாது எனக் கருதுகின்றனர். இதுபைத்தியக்காரத்தனம்" என்று நிசங்ககுறிப்பிட்டார்.

இலங்கைக்கு சுதந்திரம் கொடுக்கப்பட்ட பின்னர் தனிச் சிங்களத்தை ஆட்சிமொழியாக்க வேண்டும் என்பதற்கான அழுத்தத்தைக் கொடுப்பதற்காக நடத்தப்பட்ட முதலாவது நிகழ்வாக இதனைக்கருதலாம். இந்தக் கூட்டத்தில் பின்வரும் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. சிங்களம் அரசகரும மொழியாக்கப்படாமைக்குக் கண்டனம்.
2. தமிழுக்கு மதிப்புஆனால் சிங்களமே அரசகரும மொழியாக இருக்க வேண்டும்.
3. இதனைநடை முறைக்குக் கொண்டுவருவது தொடர்பாக ஆராய்வதற்காக செயற்குழு ஒன்றை அமைத்தல்.

இந்தக் கூட்டம் பற்றியும், இதில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்தும் சிங்களப்பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டிருந்தன. இவ்விதம்தான் 'சுதந்திரம்' பெற்ற பின்னர் தனிச் சிங்கள இயக்கம் ஆரம்பமாகியது எனக் குறிப்பிடலாம்.

**தனிச்சிங்களம் என்ற கோசத்திற்கு தமிழ்தலைவர்களின் பிரதிபலிப்பு**

இலங்கை எந்தப்பாதையில் செல்லப் போகின்றது என்பதற்கு 1948 ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி கொழும்புநகரசபை மண்டபத்தில் நிறைவேற்றப்பட்டஇந்த 3 அம்சத்திட்டம் கட்டியம் கூறுவதாக இருந்தது. 1948 மே 10 ஆம்திகதி மட்டக்களப்பு முற்றவெளியில் நடைபெற்ற தமிழ்க் காங்கிரஸின் கூட்டம் ஒன்றில் அதன் தலைவர்களான ஜி.ஜி.பொன்னம்பலம், எஸ்.ஜே.வி. செல்வநாயகம் ஆகியோர் இது தொடர்பாக முதல்முறையாக மக்களை எச்சரித்தார்கள்.

இங்கு உரையாற்றிய ஜி.ஜி. பொன்னம்பலம், "தமிழ்மக்களையும் தமிழ்ப்பகுதிகளையும் உடனடியாகப் பாதிக்கக்கூடிய பலபிரச்சினைகள் இருக்கின்றன. அவ்விடயங்களில் அவர்கள் ஒரேமுகமாக இருந்து ஒரே குரலில் பேசுமுன்வர வேண்டும்" என அழைப்பு விடுத்தார். இங்கு உரையாற்றிய தந்தை செல்வா, "சுதந்திரம் வந்து விட்டது என்று சொல் கின்றார்கள். உங்கள்அரசு உங்கள் மொழியில் நடக்கப் போகின்றதா?" என்ற கேள்வியை எழுப்பினார்.

தமிழ் மக்கள் அடுத்ததாக எதிர்கொள்ளப் போகும் நெருக்கடிகளை இரு தலைவர்களும் தெளிவாகப் புரிந்து கொண்டு விட்டார்கள் என்பதை இந்த உரைகள் புலப்படுத்தின

**1951இல் அலுவலகமொழிகள் ஆணைக்குழு நிறுவப்படல்**

1946 இல் சுயமொழிக்கொள்கை தொடர்பில் நியமிக்கப்பட்ட ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையிலான தெரிவுக் குழு தனது அறிக்கையில் கூறியது போன்ற மாற்றத்துக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 1951 இல் அலுவலக மொழிகள் ஆணைக் குழுஎன்ற ஓர் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டபோதிலும் அப்போதிருந்த அரசாங்கம் இது விடயத்தில் பல பிரச்சினைகளை எதிர்கொண்டதன் காரணமாக அந்த ஆணைக்குழுவால் எந்தவித முன் மொழிவையும் முன்வைக்க முடியவில்லை.

**அரசியலில் "சிங்களம்மட்டும்" என்றமேலாதிக்க நிலைப்பாடு**

பிரதமராகப் பதவி வகித்த டட்லி சேனநாயக்காவுக்கு எதிராக எழுச்சி பெற்றிருந்த பொதுமக்கள் எதிர்ப்பின் காரணமாக பதவி விலகியதை அடுத்து ஜோன்கொத்தெலாவல பிரதமராகப் பதவி வகித்த காலகட்டத்தில் அரசகரும மொழிக் கொள்கை தொடர்பான பிரச்சினையும் வாதங்களும் பெரிதளவில் விஸ்வரூபம் எடுத்தன. அப்போது சிங்களமும்தமிழும் அரசகரும மொழிகளாக்கப்படல் வேண்டும் என்ற கொள்கையிலிருந்துவிலகி சிங்களம் மட்டும் என்ற மேலாதிக்க நிலைப்பாடு சிங்களத் தலைவர்கள் மத்தியில் அதிகரிக்கலானது.

சிங்கள மக்களது ஆதரவைப் பெறுவதற்கான அரசியல் சதுரங்கப் போட்டியில் இக்கோரிக்கை முக்கிய இடத்தைப் பெறலானது. 1953 இற்கும் 1956 இற்கும் இடைப்பட்ட காலத்தில்"சிங்களம் மட்டும்" கோரிக்கை நாடு முழுவதும் பரந்திருந்தது. அதற்கான ஆதரவு அதிகரித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

1951 இல் பண்டாரநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறிய போது கூட சுதேசிய மொழிகளை அரச கரும மொழிகளாக ஏற்றுக்கொள்ளும் கொள்கையை முன்னெடுப்பதில் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தின் செயலற்ற தன்மையை கடுமையாக விமர்சித்ததுடன் தனது புதிய கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை தாபித்து சுதேசிய மொழிக்கொள்கை இயக்கத்துக்கான ஆதரவாளர்களை சிங்கள சமுதாயத்திலிருந்தும் பெற்றுக் கொண்டார்.

பண்டாரநாயக்காவும் அவரது சகாக்களும் இன அடையாளத்தை முன்னிறுத்துவதற்கு மொழிக்கு உள்ள சக்தியை அங்கீகரித்திருந்ததுடன் தமது அரசியல் நோக்குகளை அடைந்து கொள்வதற்கு அதன் பாற்பட்ட உண்மையை முறையாகப் பயன்படுத்தியிருந்தனர் என்பதே யதார்த்தமாகும்.

உண்மையில், பிரதமர் ஜோன் கொத்தெலாவல தமிழ்மக்களின் ஆதரவை தனது கட்சிக்குப்பெறும் நோக்கில் தனது யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தின் போது (1954 இல்) சிங்களத்தையும் தமிழையும் அரச கருமமொழிகளாக ஏற்றுக் கொள்வதற்தத்தேவையான சட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று உறுதியளித்திருந்தபோதிலும்அது சிங்கள மக்கள் மத்தியில் அவருக்கு பெரும் எதிர்ப்பையே தேடிக்கொடுத்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண வீக்கம்...

இதற்கமைய, கடந்த பெப்ரவரி மாதத்தில் 5.9 சதவீதமாக இருந்த கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான பணவீக்கம் மார்ச் மாதத்தில் 5 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. (ம-7,10)

## நீதிமன்றில்...

ஏப்ரல் - 21 பயங்கரவாத தாக்குதலின் பின்னாலுள்ள உண்மையான சூத்திரதாரி யார்? என்பது தமக்கு தெரியும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் ஊடகங்களுக்கு கருத்தொன்றை வெளியிட்டிருந்தார்.

நீதிமன்றம் உத்தரவிடுமாயின் குறித்த தகவல்களை தாம் இரகசியமாக நீதிபதிகளிடம் வழங்க தயாரெனவும் அவர் தெரிவித்திருந்தார்.

அத்துடன், குறித்த கருத்துக்கள் குறித்து வாக்குமூலம் வழங்குவதற்காகவே அவர் குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்குச் சென்று வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

இந்த நிலையில், மைத்திரி பாலவின் இந்த கருத்து தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக இவ்வாறு நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ம-7,10)

## வவுனியாவில்...

மாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இளம் யுவதி ஒருவர் தூக்கிட்ட நிலையில் காணப்படுவதாக சிதம்பரபுரம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து குறித்த யுவதியின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

யுவதி உயிரிழந்தமைக்கான காரணம் வெளியாகாத நிலையில் சம்பவம் தொடர்பில் சிதம்பரபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10,250)

## வடக்கில் வீடற்ற...

மேற்கொள்ளும் தனியார் நிறுவனத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான ஒப்பந்தத்தின் அடிப்படையில் குறித்த வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இதனடிப்படையில் பயனாளர்களுக்கு சுமார் 45 இலட்சம் பெறுமதியான 750 சதுர அடி விஸ்தீரணமுள்ள கல் வீடுகள் கிடைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10,33)

## மேலும் 7...

வைக்கப்பட்ட சிறைத் தண்டனையுடன் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தலைமன்னார் கடற்பரப்பில் கடந்த 20ஆம் திகதி கைது செய்யப்பட்ட இந்த 7 மீனவர்களும் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் படுத்தப்பட்டனர்.

இதன்போது, குறித்த 7 மீனவர்களுக்கும் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதித்து மேலதிக நீதவான் லதீப் ரதீப் விடுவித்தார்.

முதலாவது படகில் கைது செய்யப்பட்ட மூவருக்கும் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டின் கீழ் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது படகில் கைது செய்யப்பட்ட நான்கு மீனவர்களுக்கும் மூன்று குற்றச்சாட்டுக்களின் கீழ், முதலாவது குற்றச்சாட்டிற்கு ஒரு வருடமும், இரண்டாவது குற்றச்சாட்டிற்கு 6 மாதங்களும் மூன்றாவது குற்றச்சாட்டிற்கு 5 மாதங்களும் என 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 23 மாத சிறைத் தண்டனை விதித்து மேலதிக நீதவான் உத்தரவிட்டார். (ம-7,10)

## தென்னையில்...

கடந்த 24ஆம் திகதி அப்பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் தேங்காய் பிடுங்குவதற்காக மரத்தில் ஏறிய நிலையில் தென்னை மரத்தின் காஞ்சமட்டையைப்பிடித்தபோது ஓலையுடன் தவறிவிழுந்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ம-7,10,60)

## கடன் மறுசீரமை...

பெற்றால் மாத்திரமே இடைநிறுத் தப்பட்ட அபிவிருத்தி நிர்மாணப் பணிகளை முன்னெடுக்க முடியும் என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்களும் வெளிநாடுகளில் கடன் பெற்றே அரச நிர்வாகத்தை முன்னெடுத்தன.

பெற்றுக்கொண்ட கடன்களை மீள் செலுத்த முடியாது என்று அறிவிக்கப்பட்டவுடன் அபிவிருத்தி பணிகளுக்கு நிதியுதவி வழங்கிய நிறுவனங்கள் கடன் வழங்கலை இடைநிறுத்தின.

இதனால் அபிவிருத்தி பணிகளும் ஸ்தம்பிதமடைந்தன. அரசமுறை கடன்களை மறுசீரமைப்பதற்கு தீர்மானமிக்க பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி பணிகளை மீண்டும் ஆரம்பிக்க உரிய நடவடிக்கை எடுக்கப் பட்டு, தேசிய ஒப்பந்தகாரர்கள் அவர்களின் நிதியை கொண்டு அபிவிருத்தி பணிகளை ஆரம்பிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கடன் மறுசீரமைப்பு நிறைவடைந்ததும் தேசிய ஒப்பந்தகாரர்களுக்குரிய நிதி முழுமையாக செலுத்தப்படும் என பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். (ம-7,10)

## அரிசி...

நாட்டில் அரிசி தட்டுப்பாடு உருவாகலாம் என்றும் அவர்கள் எச்சரிக்கின்றனர்.

இந்த நிலையில், இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ அரிசிக்கு விதிக்கப்பட்டிருந்த 65 ரூபாய் விசேட வர்த்தக வரியும் நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் ஒரு ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன் ஆரம்பமாகிய உயர்பருவ நெல் அறுவடை, தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

எனினும்பாரிய நெல் தொழிற் சாலை உரிமையாளர்கள் 90 தொடக்கம் 100 ரூபாய் வரையிலேயே ஒரு கிலோ நெல்லை கொள்வனவு செய்வதாக சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அரசாங்கம் ஒரு கிலோ நெல்லுக்கு 135 ரூபாயாக விலை நிர்ணயம் செய்த போதிலும், விற்பனை செய்வதற்கு கையிருப்பில் நெல் இல்லை என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, அரிசியை பதுக்கி வைத்து எதிர்காலத்தில் நாட்டில் அரிசிக்கு செயற்கை தட்டுப்பாடு ஏற்படுத்த சதி முயற்சிகள் இடம்பெறுவதாக சிறிய மற்றும் நடுத்தர அரிசி தொழிற்சாலை உரிமையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ம-7,10)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



மஹஜன சம்பத
திகதி 2024.03.28
சீட்டிழுப்பு இலக்கம் 5433
C 4 5 6 3 5 1
அத சம்பத
C 6 3 5 1
சீட்டிழுப்பு இலக்கம் 0008
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.03.28
சீட்டிழுப்பு இலக்கம் - 1463
D 02 57 72 81 D
24927

மெகா பவர்
திகதி 28/03/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1781
F 13 13 17 51 76
19084

லக்கி 7 VIP
திகதி 2024.03.28
சீட்டிழுப்பு இலக்கம் 0259
Y 8 5 3 9 7 9 Y

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3675
சீட்டிழுப்பு திகதி 28.03.2024
Z 36 37 42 44
46209
Z
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.03.28
சீட்டிழுப்பு இலக்கம் 0742
கடகம் 38 44 48 62 கடகம்
01275 27

உத்தியோகபூர்வ முடிவுகள்
28.03.2024 வெற்றி வாரம் 141 வர்ணம் மஞ்சள்
K 9 8 5 5 8 2
65809
C
அடுத்த சுப்பர் ஜக்பொட் 32,093,932.00
DLB
தொலை பேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk

SUPER BALL
2407 பச்சை 28.03.2024 வியாழன்
07 14 27 42 H
59570
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 80,821,601.60


சனிதா
திகதி 2024.03.28 வெற்றி வாரம் 4568 வர்ணம் சிவப்பு
23 26 48 73 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,482,250.40

சீட்டிழுப்பு வாரம் 4119 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2024.03.28 தினம் வியாழக்கிழமை
13 21 36 52 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 15,146,254.40
240612

U 01 03 26 49 65
1583
456794
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 514,591,747.00
2024.03.28 வியாழன்

வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.102,532,680.80
அத கோடிபதி ADA KOTIPATHI
16 50 54 76 T
760654


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Rev Pas. சிமியோன்பிள்ளை சந்தணப்பிள்ளை

## (தலைமைப் போதகர் ஜெப ஆலயம்)

# இயேசு கிறிஸ்துவின் பணியில் தந்தையின் வாழ்வு

**நா**ன்கு பக்கமும் கடலால் சூழப்பட்டதும் எழில் பொங்கும் இயற்கை வளங்கள் நிறைந்ததுமான இலங்கைத் தீவில் உள்ள யாழ். மாவட்டத்தில் கடல் வளம் நிறைந்ததான செம்பியன்பற்று பிரதேசத்தில் ரோமன் கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்த சிமியோன்பிள்ளை எலிசபெத் தம்தியினருக்கு மூத்த பிள்ளையாக 1950.05.13 ஆம் திகதி பிறந்தார். இவருக்கு பெற்றோர் சந்தணப்பிள்ளை என்று பெயர் சூட்டினார்கள். இவருக்கு இரு பெண் சகோதரிகள் உள்ளனர். மூத்த சகோதரி பிரான்சிஸ் அம்மா அவர்கள் பருத்தித்துறையில் வசித்து வருகிறார். இளைய சகோதரியான மரிய கொரற்றி அவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள "ஏலிம்" சிறுவர் இல்ல பொறுப்பாளராக கடமையாற்றி வருகின்றார்.

இவர் தமது பாடசாலைக் கல்வியை செம்பியன்பற்று ரோமன் கத்தோலிக்க பாடசாலையில் கற்றார். சிறுவயதிலிருந்தே கடவுள் பயம் உள்ளவராக வளர வேண்டும் என்று எண்ணி பெற்றோர் அதிக கவனத்துடன் வளர்த்து வந்தார்கள். குறிப்பாக நாளாந்த குடும்ப ஜெபத்தில் பங்கெடுக்கவும் திருவிவிலியம் படிப்பதிலும் அதிக கவனம் செலுத்தி வந்தார்கள். இவர் சிறுவயதில் குழப்படி மிக்கவராகவே காணப்பட்டார். தந்தையின் வற்புறுத்தல்களினாலேயே குடும்ப ஜெபத்தில் விருப்பின்றி பங்கெடுத்து வந்தார். அதிகாலையில் ஒரு மைல் தூரம் நடந்தே ஞாயிறு ஆராதனைக்காக ஆலயத்திற்குச் சென்று இயேசு கிறிஸ்துவின் சரீரமாகிய அப்பத்தையும் அவரது இரத்தமாகிய ரசத்தையும் (நற்கருணை) சாப்பிடுவதற்காவே ஆலயத்தில் பணிவிடைக்காரனாக இருந்து சிறுவயதில் இதனை விளையாட்டாகச் செய்து வந்தார்.

இவர் தனது கல்வியை முடித்து 1968 ஆம் ஆண்டு கிளிநொச்சி சுகாதாரலாகாவில் பணிபுரியும் சந்தர்ப்பம் ஏற்பட்டு மாதாந்தம் 350/= ரூபாவுக்கு பணியாற்றி வந்தார். அக்காலத்தில் சினிமா பார்ப்பதிலும் கல்கி, குமுதம், கல்கண்டு, ஆனந்த விகடன் போன்ற சஞ்சிகைகள் படிப்பதிலும்தான் அதிக விருப்பம் கொண்டு இளைஞனாக இளமையை தன் விருப்போடு கழித்து வந்தார்.

இவ்வாறு இருக்கும் வேளையில் 1972 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலுள்ள சிங்கள மகா வித்தியாலயத்திற்கு முன்பாக உள்ள மைதானத்தில் கண்டி வெளிச்சத்தின் வீடு (light house) சபையைச் சேர்ந்த Rev Pas "ஷான்டி" அவர்களால் சுகமளிக்கும் ஆராதனை நடைபெற்றது. ஆராதனையில் கலந்து கொள்வதற்காக தகப்பனாருடன் சென்றிருந்தார். ஆராதனையில் Rev Pas "ஷான்டி" அவர்கள் ஜெபித்த போது இவரது தந்தை மயங்கி விழுந்து விட்டார். உதவியாளர்கள் வந்து அவருக்கு உதவி செய்தார்கள் பின்பு இருவருமாக வீட்டிற்குச் சென்றார்கள். அன்றைய இரவு முழுவதும் கேள்விக்குறிகளோடு சிந்திக்கலானார். அது அவருக்கு நீண்ட இரவாகக் காணப்பட்டது. கேள்விக்கான விடைகளோடு மறுநாளும் யாழ்/விடுதலை மண்டபத்தில் அதே ஆராதனையில் பங்குபற்றினார். அன்றைய தினமே இயேசுவை ஏற்றுக் கொண்டார். இயேசுவால் பிடிக்கப்பட்டார். இரட்சிப்பு பெற்றார். இவரது உள்ளம் மகிழ்ந்தது.

இவரது தந்தை நான்கு ரூபாவுக்கு பரிசுத்த வேதாகமத்தின் புதிய ஏற்பாடு புத்தகம் வாங்கிக் கொடுத்தார். வேதாகமத்தைப் படிக்க படிக்க தேவனை அறியும் அறிவு மேலோங்க மேலோங்க சினிமா பார்ப்பதிலும் சஞ்சிகைகள் படிப்பதிலும் இருந்த ஆர்வம் முற்றாக இல்லாமல் போய் விட்டது. இவ்வாறு ஆறு மாதங்கள் சென்றபின் யாழ்ப்பாண பண்ணைக் கடலில் 1973.03.19 ஆம் திகதி Rev Pas அருமை நாயகம் அவர்களால் ஞானஸ்நானம் பெற்றார்.

ஞானஸ்நானம் பெற்ற அன்றே சபை குழுவினர்களுடன் நற்செய்தி அறிவிப்பதற்காக துண்டுப் பிரசுரங்களுடன் மட்டக்களப்பிற்குச் சென்று தனது முதலாவது சுவிசேஷப் பணியை ஆரம்பித்தார். நான்கு நாட்கள் பணியை முடித்துக் கொண்டு மீளவும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது காலில் காயம் ஏற்பட்டதினால் மூன்று மாதங்கள் ஓய்வு எடுக்க வேண்டுமென வைத்தியர்கள் கூறி விட்டார்கள். மகன் வேதனைப்படுவதை பார்த்த இவரது தாயார் "உன்னை சந்தண மாதாவுக்கெல்லோ நேத்தி வைச்சு பிறந்து சந்தணப்பிள்ளை என்று பெயரும் சூட்டினார்கள். நீ இப்ப சபைக்குச் செல்வதால்தான் உனக்கு இந்த நிலை" என தாயார் பரிதாபமாக கூறினார். இவ்வாறு சக பணியாளர்களும் கூறினார்கள்.

கடவுள் தன் மீது காட்டிய அன்பின் நிமிர்த்தமாக உலக சிற்றின்ப வாழ்வு வேண்டாம் என முடிவெடுத்து சுகாதாரலாகாவின் பணியாளராக இருப்பதைவிட கடவுளின் பணியாளராக இருப்பதே அதி சிறந்தது எனக் கருதி 1975 ஆம் ஆண்டு அரச வேலையை இராஜினாமா செய்து இந்திய வேதாகமக் கல்லூரியில் வேதம் படிப்பதற்காக 174 ரூபா 50 சதம் விமான ரிக்கெட் எடுத்து (பலாலி - திருச்சி ) இந்தியா சென்றார்.

பயிற்சியினை நிறைவு செய்து இலங்கைக்கு வந்தவர் முன்பு தான் வேலை செய்த போது யுத்த கலவரத்தால் கொழும்பிலிருந்தும் மலையகங்களிருந்தும் வருகைதந்து கிளிநொச்சி பகுதிகளில் வாழ்ந்த மக்களின் வேதனைகளையும் தேவைகளையும் நன்கு தெரிந்து கொண்டிருந்தார். அத்துடன் தான் பெற்ற தரிசனத்தை ஏனைய மக்களும் பெற வேண்டும் என்ற வாஞ்சையும் இருந்ததால் கிளிநொச்சி பிரதேசத்தை தெரிவுசெய்து இயேசு கிறிஸ்துவின் பணியை ஆரம்பித்தார்.

1979 ஆம் ஆண்டு கொழும்பு இயேசு ஜீவிக்கிறார் சபையின் ஸ்தாபகரான Rev Pas இராஜேந்திரம் அவர்களின் சகோதரியான ஞானம்மா அவர்களை திருமணம் செய்து கொண்டார். திருமணத்தின் பின்னர் இருவருமாக கிளிநொச்சி பரந்தனுக்கு வருகை தந்து 12 ஆத்துமாக்களுடன் இயங்கி வந்த ஜெப ஆலய சபையை பொறுப்பெடுத்து ஆராதனை செய்து வந்தார்கள். நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலையின் காரணமாக சிறிது காலத்தின் பின்னர் கிளிநொச்சி நீர் பாசன திணைக்களத்தில் பணிபுரிந்தவரான திரு ஸ்ரீபன் (தற்போதைய மன்னார் பிரதேசத்தில் பெலதெனியா சபையின் போதகர்) அவர்களின் மூலம் ஜெப ஆலய காணி அறிமுகம் செய்யப்பட்டது. காணியை துப்புரவு செய்து ஆராதனைக்கூடம் அமைத்து ஆராதனை செய்து வந்தார்கள். அத்துடன் வீடு தரிசிப்புக்கள் செய்து கடவுளின் விலைமதிப்பற்ற சத்தியத்தை இருவருமாக மக்களுக்கு அறிவித்து வந்தார்கள்.

பல கிராமங்களுக்கு துவிசக்கரவண்டியிலேயே சென்று நற்பணி ஆற்றி வந்தார்கள். தந்தையின் பொக்கட்டில் நற்செய்தித் துண்டு பிரசுரங்கள் இல்லாத நாட்களே இல்லை எனலாம். 1982 ஆம் ஆண்டு "ஏலிம்" நிறுவன பொறுப்பாளராக இருந்தவர் 7,000 பணம் உந்துருளி பெறுவதற்காக அன்பளிப்பாக கொடுத்தார் இதன்மூலம் MP90 ரக உந்துருளி பெற்று பல கிராமங்களுக்கு சென்று வந்தார்கள். பல மாவட்டங்களுக்குச் சென்று பணியை மேலும் விஸ்தரித்தார்கள்.

பழக்கமான கடைகளில் கடனுக்கு பெற்றோல் வாங்கியே தரிசிப்புக்களை மேற்கொண்டு வந்தார்கள். ஆலயத்தில் போடப்படும் காணிக்கை பணத்தில் கடனை மீளச் செலுத்தும் வழக்கும் தொடர்ச்சியாக இருந்து வந்தது. ஒரு தடவை கடன் செலுத்த முடியாது நிலை ஏற்பட்டதினால் கடை உரிமையாளர் பல நபர்களின் மத்தியில் தந்தையை ஏசிவிட்டார். தந்தை எதுவும் பேசாமல் மௌனமாக நின்றார். பின்னர் ஓரிரு நாட்களில் கடனை செலுத்தி விட்டார். இதுபோன்று எத்தனையோ கசப்பான அனுபவங்கள், நிகழ்வுகள் தந்தையின் வாழ்வில் ஏற்பட்டுள்ளன.

தந்தை இனக்கலவரம் இந்திய இராணுவ ஆயுதக் குழுக்கள் எண்ணிலடங்கா யுத்த இடப்பெயர்வுகள், அகதி முகாம் (மெனிக் பாம்), சுனாமி பேரலைகள், கொரோனா நோய்கள், பொருளாதார நெருக்கடிகள் இன்னும் பல்வேறுபட்ட அசாதாரண நிலைகளின் மத்தியிலும்தான் இயேசு கிறிஸ்துவின் பணியை முழுமையாக செயற்படுத்தி வருகின்றவர்.

"In a calm Sea every body is the sailor" எனும் ஆங்கில பழமொழி உண்டு அதாவது "அலையில்லாத கடலில் எல்லோராலும் படகோட்ட முடியும்." ஆனால் தந்தையின் நற்செய்திப் பணியானது சூறாவளி, கொந்தளிப்பு, பேரலைகள் மத்தியிலேயே தனது பயணத்தைத் தொடர்பவர், தான் மூழ்கும் நிலை ஏற்பட்டாலும்கூட அவர் அஞ்சியதில்லை. ஏனெனில் எவ்வாறு பேதுரு கடலில் மூழ்கும்போது (மத்தேயு 14:31) இயேசு தூக்கிவிட்டாரே அவ்வாறு தன்னையும் இயேசு மீட்க வல்லவர் என்று விசுவாசிப்பவர்.

ஜெப ஆலயமானது கிளிநொச்சி (13), முல்லைத்தீவு(18), வவுனியா(21), யாழ்ப்பாணம்(2) ஆகிய மாவட்டங்களில் 54 கிளைச் சபைகளைக் கொண்டு திகழ்கின்றது. அண்மையில் கூட புதுக்குடியிருப்பு இரணைப்பாலையிலும் கிளைச் சபை ஒன்று தந்தையால் உருவாக்கம் பெற்றது. கடவுள் பணிக்கு "வயது ஒரு தடையில்லை" என்பதை எடுத்துக்காட்டிய பரிசுத்தவான்.

அத்துடன் எண்ணிலடங்கா ஊழியக்காரர்களையும் போதகர்களையும் கர்த்தருக்குள் வழிநடத்தி நெறிப்படுத்தி வருகின்றார். எல்லோராலும் "மூத்த பாஸ்ரர்" என்று அன்புடன் அழைக்கப்பட்டு வருகின்றார்.

தந்தையின் குடும்ப வரிசையில் மகள் Sis.வேஜின் அவர்கள் தந்தையுடன் இணைந்து ஊழியம் செய்து வருகின்றார். அத்துடன் இந்தியா, மாலைதீவு போன்ற நாடுகளுக்கும் சென்று நற்பணியாற்றி வருகின்றார்.

மகள் Rev Pas ஞானசாந்தன் அவர்கள் கொழும்பு கிறிஸ்தவ சபைகளின் ஒருங்கிணைப்பாளராக பணி புரிந்து வருகின்றார். மகன் Rev Pas ஞானசொருபன் அவர்கள் தந்தையுடன் இணைந்து ஜெப ஆலய உதவிப் போதகராக கடமையாற்றி வருகின்றார். அத்துடன் 25க்கு மேற்பட்ட நாடுகளுக்குச்சென்று நற்பணியாற்றிவருகின்றார்.

மகள் Rev Pas சகரியா அவர்கள் கொழும்பு கிறிஸ்தவ சபைகளின் தொழில்நுட்பவியலாளாரக பணிபுரிந்து வருகின்றார். இவர்களுக்கு பல வேலைகள் கிடைத்த போதிலும் அவற்றிற்கு இணங்காமல் கடவுள் பணியையே செய்து வருகின்றார்கள். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் கடவுள் பணியை ஆற்றி வருவது இவர்களில் இருக்கும் விசேட அம்சமாகும்.

ஞானம்மா அம்மா அவர்கள் 2021ஆம் ஆண்டு கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார். இவரின் இழப்பு குடும்பத்தினருக்கு மாத்திரம் அல்ல எம் அனைவருக்கும் பேரிழப்பாகும். இதனை வார்த்தைகளால் கூறமுடியாது. ஆயினும் என்றோ ஒருநாள் பலலோகத்தில் முகம் முகமாய் சந்திப்போம் என்ற நம்பிக்கையில் பயணத்தைத் தொடர்கின்றோம்.

தந்தை உண்மைத்துவம், நேரமுகாமைத்துவம், சமூகப் பற்று, உணர்வுகளை மதித்தல், உறவுத்தன்மை, உடைகளில் நேர்த்தி, சமத்துவம், தொலைபேசியை எந்த நேரத்திலும் தயார் நிலையில் வைத்திருத்தல், தவறிய அழைப்புக்கு செவிகொடுத்தல், எளிமை, பாரபட்சமின்மை போன்ற பல குணாதிசயங்களை தன்னகத்தே அணிகலன்களாகக் கொண்ட கடவுளின் பணியாளராவார்.

விசுவாசத்தினை மட்டும் கொண்டு முன்சென்ற அசாதாரண மனிதர் இவர். கடவுளின் அளப்பரிய அன்பையும் இரக்கத்தையும் வல்லமையையும் பெற்று தந்தை ஆற்றிவரும் சமூக பணியை கௌரவிக்கும் முகமாக 14.01.2024 அன்று கிளிநொச்சி மாவட்ட திறன்விருத்தி மண்டபத்தில் வெகுசன ஊடக நற்செய்திப் பணிப் பிரிவினரால் [Mass Media Gospel Mission (Wing of Emf synod of India)] சிறப்பு முனைவர் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

"ஒருவன் எனக்கு ஊழியம் செய்தால் அவரை பிதாவானவர் கனம் பண்ணுவார்" (யோவான் 12:26) தன் பிறப்பிற்கு மகுடம் சூட்டி 52 ஆண்டுகளாக தன் வாழ்நாட்களை கடவுளுக்கு அர்ப்பணித்து வரும் தேவதந்தையை தலைமைச் சபை ஊழியர்களும் போதகர்களும் விசுவாசிகளும் மனதார வாழ்த்துவதோடு நீடூழி காலம் வாழ கடவுளின் ஆசியை வேண்டி நிற்கின்றோம்.

ஆமென்

(290)

**"பவுல் நட்டார்
அப்பொல்லோ நீர் பாய்ச்சினார்
விளையச் செய்வது தேவன்"
(கொரிந்தியர் 3:6)**

**ஊழியர்கள் போதகர்கள்
விசுவாசிகள்
தலைமைச் சபை ஜெபஆலயம்
கிளிநொச்சி
077 978 6059**
(Pastor)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல. 190 [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org